# ஆய்த எழுத்து

தமிழியல் ஆய்வு இதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550
பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ் - ISSN - 2278-7550
UGC - பல்கலைக் கழக மானிய குழுவின் அங்கீகாரம் பெற்றது

ஆகஸ்ட் – 2019

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550
UGC RECOGNIZED JOURNAL
UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118



visit us: www.pallavipathippakam.in

பல்லவி பதிப்பகம்

ISSN : 2278-7550

2278-7550

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

ISSN : 2278-7550

UGC - பல்கலைக் கழக மானிய குழுவின் அங்கீகாரம் பெற்றது

UCG RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

மலர் : 7 ஆகஸ்ட்-2019 இதழ் : 8

பதிப்பாசிரியர்

நல். நடராசன்

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

பல்லவி பதிப்பகம்

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



EDITORIAL BOARD

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavoor.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.P.Sathyamoorthy**
*Madurai Kamarajar University, Madurai.*
mkutamil2010@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Tiruchy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

ஆசிரியர் குழு

முனைவர் சி.தியாகராசன்
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

முனைவர் க.இரமேஷ்
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

முனைவர் போ.சத்தியமூர்த்தி
*மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.*
mkutamil2010@gamil.com

முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

முனைவர் கி.சங்கரநாராயணன்
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

முனைவர் உ.அலிபாவா
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

முனைவர் சு.அரங்கநாதன்
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
arangantnou@gamil.com

**Dr.S.Kavitha**
*Tamil University, Thanjavoor.*
skavithatamil@gamil.com

**Dr.Manonmanidevi Annamalai**
*Sulthan Itrecue Kalviyal University, Malaysia.*

**Dr.Paramasivam Muthuswamy**
*Malasyia University, Malasyia.*
mparam98@gmail.com

**R.F.Arooz**
*Raapa International Campus, Director, Sri Lanka.*
raapa.arooz@gmail.com

## ADVISORY BOARD

**M.Senthilkumar**
*Periyar University, Salem.*
senthiltamilnesan@gamil.com

**Dr.V.S.Sreenivasan**
*Nandha Arts and Science College, Erode.*
srivc2345@gmail.com

**Dr.T.K.Anuradha**
*Treenedi Girls College, Namakkal.*
anuradha.pugal@gamil.com

**Dr.P.Senthilkumar**
*Periyar University Constituent Arts and Science College, Dharmapuri.*
Senthakil06@gmail.com

**Dr.R.Vijyarani**
*Beshap Heeper College, Tirucherappalli.*
vejheya.rani@gamil.com

**Dr.R.Nirmala Devi**
*Vellalar Womens College, Erode.*
prnirmaladevi@gmail.com

**Dr.K.Gayathiri**
*Government Arts College, C.Mutlur, Chidambaram.*

**முனைவர் ச.கவிதா**
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
skavithatamil@gamil.com

**முனைவர் மனோன்மணிதேவி அண்ணாமலை**
*சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகம், மலேசியா.*

**முனைவர் பரமசிவம் முத்துசாமி**
*மலேசியா பல்கலைக்கழகம், மலேசியா.*
mparam98@gmail.com

**R.F.அரூஸ்**
*ராபா பண்ணாட்டு வளாகம்,*
இயக்குனர், *இலங்கை.*
raapa.arooz@gmail.com

## ஆலோசனை குழு

**ம.செந்தில்குமரர்**
*பெரியார் கல்கலைக்கழகம், சேலம்.*
senthiltamilnesan@gamil.com

**முனைவர் வெ.ச.சீனிவாசன்**
*நந்தா கலை அறிவியல் கல்லூரி, ஈரோடு.*
srivc2345@gmail.com

**முனைவர் தா.க.அனுராதா**
*டிரினிடி மகளிர் கல்லூரி, நாமக்கல்.*
anuradha.pugal@gamil.com

**முனைவர் பொ.செந்தில்குமரர்**
*பெரியார் பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தருமபுரி.*
Senthakil06@gmail.com

**முனைவர் இரா.விஜயராணி**
*பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.*
vejheya.rani@gamil.com

**முனைவர் நிர்மலா தேவி**
*வேளாளர் மகளிர் கல்லூரி, ஈரோடு.*
prnirmaladevi@gmail.com

**முனைவர் க.காயத்ரி**
*அரசு கலைக்கல்லூரி, சி.முட்லூர், சிதம்பரம்.*

# படைப்புகள் வரவேற்கப்படுகின்றன...!

**ஆய்த எழுத்து** – காலாண்டிதழ் தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். இவ்விதழ் ஜனவரி, ஏப்ரல், ஜீலை மற்றும் அக்டோபர் மாதங்களில் வெளியாகிறது. பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற எவரும் கட்டுரை எழுதலாம். சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய பிற துறைகள் அனைத்தும் பொருளாகலாம்.

கட்டுரைகளில் கூறப்படும் கருத்துகளுக்கு அக்கட்டுரை ஆசிரியரே பொறுப்பாவார். கட்டுரையாளர்களின் கருத்து இதழ் ஆசிரியர் குழுவின் கருத்தினை பிரதிபலிப்பன அல்ல. படைப்புகளைச் சுருக்கவும், திருத்தவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு. கட்டுரைகள் ஆய்வுத் தரமுடையவைகளாக அமைதல் வேண்டும். ஆய்வுப் பொருளுக்கு முரண்பட்டதாக அமையும் கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. படைப்புகளைத் திருப்பி அனுப்ப இயலாது.

**ஆய்த எழுத்து** - தமிழியல் ஆய்வுக்கான புதியகளம். 2013-ம் ஆண்டு முதல் காலாண்டிதழாக ஆண்டுதோறும் ஜனவரி, ஏப்ரல், ஜுலை மற்றும் அக்டோபர் மாதங்களில் இவ்விதழ் வெளியாகிறது. கல்லூரி, பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், ஆய்வு மாணவர்கள், தமிழறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள் போன்ற பலரும் இவ்விதழில் ஆய்வு கட்டுரை எழுதி வருகின்றனர். இவ்விதழுக்கு கட்டுரை அனுப்ப விரும்புவோர் கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

1. **பொருள்** : சங்க இலக்கியம் முதல் நவீன இலக்கியம் வரையிலான இலக்கிய ஆய்வுகள், நாட்டுப்புறவியல், இலக்கணம், மொழியியல் ஆய்வுகள் மற்றும் தமிழோடு தொடர்புடைய அனைத்தும் இதன் பொருளாகலாம்.

2. **அளவு** : எம்.எஸ். வேர்டில் (MSWordl), ல் A4 ஆளவில், 1.5 வாக்கிய இடைவெளியில் (LiningSpace), 12 புள்ளி எழுத்தளவில் மூன்று முதல் ஐந்து பக்கங்களுக்குள் கட்டுரை அமைய வேண்டும்.

3. **முகவரி** : கட்டுரை தலைப்பின் கீழ் ஆசிரியர் பெயர், பதவி, முகவரியும், கட்டுரைமுடிவின் கீழ் இதழ் அனுப்ப வேண்டிய முகவரி, மின்னஞ்சல் முகவரி மற்றும் அலைபேசி எண்களும் இடம்பெறவேண்டும்.

4. **கட்டுரை அனுப்பும் முறை** : கட்டுரையை ayidhaezhuthu@gmail.com (Or) pallavipublications@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம்.

5. தனி இதழ் விலை ரூ.300/- இதழைத் தொடர்ந்து பெற விரும்புவோர் உறுப்பினர் கட்டணம் செலுத்தலாம். ஒரு ஆண்டிற்கு 12 இதழ்கள் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1 ஆண்டுக்கட்டணம் (தனி நபர்) | - | ரூ. 2400/- |
| 1 ஆண்டுக்கட்டணம் (நூலகம் கல்வி நிறுவனங்கள் | - | ரூ. 3000/- |
| வாழ்நாள் கட்டணம் | - | ரூ. 25,000/- |
| புரவலர் கட்டணம் | - | ரூ. 50,000/- |

6. **கட்டணம் செலுத்தும் முறை** : உறுப்பினர் (சந்தா) கட்டணத்தை **PALLAVI PATHIPPAKAM** என்ற பெயரில் வரைவோலையாக (**DD**) ஈரோட்டில் மாற்றிக் கொள்ளத்தக்க வகையில் (**PAYABLE AT ERODE**) அனுப்பலாம். இணையவழி, (**NET BANKING**), அலைபேசி (**Mobile Banking**) வங்கி பரிவர்த்தனை உடையவர்கள் **NEFT** முறையிலும் பணம் செலுத்தலாம்.

**A/C Name: PALLAVI PATHIPPAKAM.**
**A/C Type : CA,**
**A/C No : 33679969977.**
**Bank : STATE BANK OF INDIA,**
**Sathy Road, Erode -638 011.**
**IFSC : SBIN0016100.**

**பல்லவி பதிப்பகம்**
118, மேட்டூர் சாலை, கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

0424-2251545, 94422 51549
97919 51549, 63817 01339

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com

**படைப்பாளர்களின் கவனத்திற்கு ....**

இதுவரை வெளியான, அனைத்து ஆய்த எழுத்து இதழ்களையும் எங்களது **www.pallavipathippakam.in** இணையதளத்தில், இதழ்கள் - ஆய்த எழுத்து பகுதியில் முழுமையாக பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம்.

**அல்லது**

**https://ayidhaezhuthu.in** என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் (Download) செய்து கொள்ளலாம். அவ்வாறே தங்களது ஆய்வுக்கட்டுரைகளை இந்த இணையதளத்தின் வழியாக அனுப்பலாம்.

# பொருளடக்கம்


1. அறம் போற்றும் வள்ளுவம்

***முனைவர் இரா.சுந்தரமூர்த்தி - 1**

2. தொல்காப்பியத்தில் பண்பாட்டுச் சுவடுகள்

***முனைவர் க.செல்வராணி - 3**

3. அண்ணாவின் படைப்புகளில் பெண்ணிய மறுமலர்ச்சி

***கோ.சுசீலா - 6**

4. தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம்

***முனைவர் அ.பாக்கியமுத்து - 10**

5. புறநானூறு காட்டும் அறச்சிந்தனைகள்

***முனைவர் ர.தமிழ்ச்செல்வி - 13**

6. தமிழ் இலக்கியங்கள் இயம்பும் அறச்சிந்தனைகள்

***சே.சித்ரா - 16**

7. நாலடியாரில் அறச் சிந்தனைகள்

***முனைவர் செ.யோகம் - 19**

8. கீதாரி நாவலில் அறச்சிந்தனைகள்

***ஆ.ஆவுடையம்மாள் - 22**

9. புதுமைப்பித்தன் சிறுகதைகளில் அறச்சிந்தனைக் கருத்துகள்

***ப.விசாலாட்சி - 24**

10. பாவலர் நாச்சியப்பன் கவிதைகளில் வாழ்வியல் அறம்

***முனைவர் திருமதி ஜெ.காவேரி - 28**

11. புறநானூற்றில் வாழ்வியல் அறம்

***முனைவர் தே.மெர்லின் மினி - 31**

12. இலக்கியம் காட்டும் பொருள் அறம்

***முனைவர் ம.வனத்தையன் - 33**

# அறம் போற்றும் வள்ளுவம்

*முனைவர் இரா.சுந்தரமூர்த்தி, துறைத்தலைவர், மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி, காளிப்பட்டி – 637 501. நாமக்கல் மாவட்டம், அலைபேசி எண்: 9965215623.

**முன்னுரை**

நம் நாடு இருபத்தியோராம் நூற்றாண்டு அறிவியலின் வியத்தகு வளர்ச்சி கண்டுள்ளது. ஆக்கநிலைகளில் மட்டுமல்ல, அழிவு நிலைகளிலும் கூட, நாடுகளிடையே போரும் பூசலும், நாளும் நாளும் நிகழ்ந்தவண்ணமாய் உள்ளன. இயற்கைக் சீற்றங்களினாலும், செயற்கை அழிவுகளினாலும் மனித வாழ்க்கை சிக்கல்களுக்கிடையே சிக்கித் தவிக்கிறது. மனிதகுலம் மாண்புற மனித மனம் பண்பட வேண்டும், சாதி, மத இன குல வேறுபாடுகள் நீங்கவேண்டும் .நட்புரவு நிலைக்கவும் , ஒருமைப்பாடு ஓங்கவும் மனித மதிப்புகள் போற்றப்படவும் மக்கள் மனத்தில் மனித நேயத்தோடு அறச்சிந்தனைகள் வளர வேண்டும்.

அமிழ்தினும் இனிய தமிழ் மொழியில் அரிய நீதிகளையும் வாழ்வியல் நெறிகளையும் இலக்கியங்கள் வாயிலாக எடுத்துக்காட்டிய சான்றோர் பலர் அவர்களில் குறிப்பிடத்தகுந்தவர் வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகை மனித சமுகத்திற்கு அவர் கூறும் அறநெறிச் சிந்தனைகள் திருக்குறளில் எவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அறமும் தருமமும்**

அறம் வேறு தர்மம் வேறு, தமிழ் மொழியில் தர்மம் என்பது, பிச்சை போடுதல், கோயில் கட்டுதல், குளம் வெட்டுதல், கொடை வழங்குதல் போன்றவையாகும். ஆனால் அறம் என்பது தர்மம் போன்ற அணுகுமுறையோ பார்வையோ கொண்டதல்ல அதனினும் வேறுபட்ட முரண்பட்ட ஒன்றாகும். ‘அறு’ என்பதிலிருந்து வந்தது அறமாகும். குறையை அகற்று குற்றத்தை நீக்கு, தீமையை ஒழி, ஆணவம், கண்மம், மாயை எனும் மும்மலத்தை விட்டகலு, பேராசைகளிலிருந்து விடுபடு என்பதாகும்.

செம்பிற்களிம்பு ஏறுவது போல், உடம்பில் அழுக்குப்படிகிறது. தவறாமல் நாம் தினந்தோறும் தூய்மைப்படுத்திக் கொள்கிறோம். வீட்டில் குப்பைபடிவது, தூசிசேர்வது, மாசுபடிவது எல்லாம் ஓர் இயற்கை நிகழ்ச்சியாக இருக்கிறது. ஒவ்வொரு முறையும் சுத்தம் செய்யும் போது வீடு பளிச்சென்றும் தூய்மையாகவும் பொலிவாகவும் காணப்படுகின்றன.

அதுபோல் நம் மனதிலும் மாசுபடிகிறது. ஆதனை வள்ளுவர் அழுக்கு என்கிறார். வீட்டில் குப்பை சேர்வது போல் மனதில் அழுக்கு சேர்வதும் ஓர் இயற்கை நிகழ்வேயாகும் மனம் என்பது இயல்பாகவே நன்மைகளைவிடத் தீமைகளை எளிதில் விரைவாகவும் அழுத்தமாகவும் பற்றிக் கொள்கிறது. இதனை ‘அறம்’ என்ற ஒன்றினால் மட்டுமே அறவே அறுத்தெறிய முடியும், மனமாசு நீக்க முடியும். வாய்மை எனும் தலையாய அறத்தினால் மனதைத் தூய்மை செய்து கொள்க எனத் திருக்குறள் இயம்புவதைக் காணலாம்.

அறம் என்பது உயிரின் ஆக்கம், உயிருக்குக் கிடைத்த ஊட்டச்சத்து, உயிருக்கு மேலும் மேலும் வலிமை தருவது, உண்மையான உழைப்பைத் தூண்டுவது உடம்புக்கு நோய்த் தடுப்பாற்றல் போல, உயிர் வாழ்வுக்கு ஒரு நோய்த்தடுப்பாற்றல் என உணர வைக்கிறது அறம் ஒரு பேராற்றல், அது தீமையையும், தீமை செய்வோரையும் அழித்தே தீரும். ஒரு விளக்கின் மூலம் ஆயிரம் விளக்குகளை ஏற்றலாம் ஒருவரிடமுள்ள பண்புடைமை பல பண்பாளர்களை உருவாக்கலாம். ஆனால் ஒருவனிடமுள்ள கயமை ஆயிரம் கயவர்களை உருவாக்கி விடும். எனவே அறத்தின் மூலமாகவே நம்மையும் நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் வளப்படுத்த முடியும் இதனையே வள்ளுவம் நமக்கு வழிமொழிகிறது.

**அறம் வலியுறுத்தல்**

திருக்குறளில் முதல் நான்கு அதிகாரங்கள் பாயிரம் எனப்பட்டன. இவைநான்கும் உலக நிகழ்வுக்குப் பொதுவானவை. இவ்வுலக இயக்கத்திற்குக் காரண சக்தியாகிய

இறையை வழிபடுதல் முதலாவதாகவும், மழை பொழிய உலகம் வாழ்வதால் அதனை இரண்டாவதாகவும், உலகம் பண்புடைய சான்றோரால் நிலைபெறுகிறது என்பதால் தன்னலம் நீத்தாரை இறைக்கும் இயற்கைக்கும் நிகராக மூன்றாவதாகவும் உலக நிலை பேற்றுக்கும் வாழ்வுக்கும் இன்றியமையாத ஆற்றலாகிய அறத்தை நான்காவதாகவும் வைத்துள்ளார். அறம் என்பது வெறுமனே தர்மம், நீதி என்றில்லாமல் ஒரு இயற்கைப் பேராற்றல் என்பதை உறுதிபடக் கூறுகிறார்.

**அறம் - உயிருக்கு ஆக்கம்**

**சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு**
**ஆக்கம் எவனோ உயிர்க்கு** (31)

உயிருக்கு ஆக்கம் என்பது உயிரைப் பலவகையாலும் ஒளி பெறச் செய்வது, வலுச்சேர்ப்பது, ஊக்கம் தருவது மென்மேலும் உயர்த்துவதாகும்.

**அறத்தினூஉங்கு ஆக்கமும் இல்லை அதனை**
**மறத்தலின் ஊங்கில்லைகேடு** (32)

ஆக்கமென்பது உயிருக்குக் கிடைக்கும் வலிமையே என்பது இக்குறளின் வலி அறியலாம்.

**காக்க பொருளை அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூஉங்கு இல்லை உயிர்க்கு** (122)
**மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்.** (457)

மேற்கூறிய குறள்களின் வாயிலாக உயிருக்கு ஆக்கம் தருவது அறமே, அறம்தான் ஆக்கம் - அல்லாதது கேடே என வலியுறுத்துகின்றார். உலக உயிர்கள் ஒளிபெற்றோங்கவும் தழைத்துச் செழிக்கவும் அறம் உதவுகின்றது.

**அறமும் இறைமையும்**

அறத்தை அறக்கடவுள் என வள்ளுவர் உருவகம் செய்துள்ளார். கடவுள் வாழ்த்தில் அறவாழி அந்தணன் என இறைவன் குறிக்கப்படுகின்றான். அறம் என்பது இறைவனோடு ஒப்பிடக்கூடிய ஓர் இயற்கைப் பேராற்றல் என பல இடங்களில் வள்ளுவர் கூறியுள்ளார்.

**என்பிலதனை வெயில் போலக் காயுமே**
**அன்பி லதனை அறம்** (77)

அன்பில்லாத உயிரை அறம் தன் வெப்பத்தால் காய்ந்து வருத்துமாம். வெப்பத்தைத் தாங்கும் எலும்பு இல்லாததால் அப்புழுக்களை வெயில் காய்ந்து அழிப்பது போல அறமைன்னும் ஆக்கமில்லாத உயிர்களை அவ்வறமே காய்ந்து அழித்துவிடும் எனக் கூறுகிறது.

அன்பு முதலிய அறநெறிகளால் உயிர் வலிமை பெறுகிறது. ஆவை இல்லாதபோது உயிர் ஆற்றல் இழக்கிறது.

**கதங்காத்துக் கற்றுஅடங்கல் ஆற்றுவான் செவ்வி**
**அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து** (130)

கடுங்கோபம் தவிர்த்து கற்க வேண்டியதைக் கற்று அடக்கமுடையவனாக இருக்கக் கூடிய மனப்பக்குவம் பெற்றிருந்தால் அறம் அவன் வரும் வழியே நின்று எதிர்பார்த்துக் காத்திருக்குமாம்.

**அறம் ஒரு தடுப்பாற்றல்**

நம் கண்களில் சிறு துரும்பு விழுந்துவிட்டால் கண் படாதபாடுபட்டு அரை வெளியேற்ற முயலும் அதுபோலத்தான் அறமும் வேண்டாததை, தீயதை வெளியேற்ற முயலும். நம் உடலடானது இயற்கையாகவே நோய்த் தடுப்பாற்றல் உடையதாயினும். மனிதன் கட்டாயமாக தீய செயல்களில் ஈடுபட்டு உடலைக் கெடுத்துக் கொள்கிறான். பின்பு மருந்தால் குணமாவதுபோல, நீதியை நிலைநாட்ட அறம் அரு மருந்தாகிறது.

அறம் ஒரு மின்னாற்றல் போன்றது. மின்னாற்றல் சக்தியாகி பல்வேறு எந்திரங்களை இயக்குவது போல அறமும் மனதிற்கு உந்து சக்தியாய் நம் முன்னேற்றம் நோக்கி அழைத்துச் செல்கிறது.

**முடிவுரை**

அறம் தழைக்க தழைக்க அல்லாதவை குறையும் நாமும் நல்லவற்றைச் செய்யச்செய்ய அல்லவை தாமே குறைந்து மறையும் தீமையைத் தீமையால் அழிக்க முயல்வது தீயைத் தீயால் அழிக்க முற்படுவது போன்றதாகும் . தீமையை நன்மையை வளர்ப்பதன் மூலமாகவே அழிக்கமுடியும் அதனால் தான் வள்ளுவம் தீமையை மறந்து தீமை செய்தாருக்கும் நன்மையே செய் என்று குறள்வழி அறத்தை நிலை நாட்டுகிறார்.

# தொல்காப்பியத்தில் பண்பாட்டுச் சுவடுகள்

***முனைவர் க.செல்வராணி,** கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை, பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பாலக்கோடு.

**முன்னுரை**

தமிழ் நூல்களுள் மிகவும் பழமையானதும், முதன்மையானதும் தொல்காப்பியம் ஆகும். எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமின்றி மனிதர் வாழ்வியலுக்கும் பொருள் கண்ட பெருந்தகை தொல்காப்பியர் இவர் இயற்றிய தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று அதிகாரங்களையும், அதிகாரத்திற்கு ஒன்பது இயல்களாக மொத்தம் 27 இயல்களையும் உடையது. இதில் மூன்றாவதாகக் குறிப்பிடப்பெறும் பொருளதிகாரம் தமிழ்ப் பண்பாட்டின் கருவூலமாகத் திகழ்கின்றது. பண்டைக் கால மக்கள் எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழவேண்டும் என்று வரையறுத்துக்கொண்ட வாழ்க்கையை வாழந்தார்கள், அவ்வாறு வாழ்வதற்கு ஏற்ற அறக்கருத்துக்களையும், பண்பாட்டையும் தொல்காப்பியம் எடுத்தியம்புகிறது. அக்கருத்துக்களைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பாண்பாட்டுக் கூறுகள்**

பண்பாடு என்பது மக்களின் வாழ்வில் நிகழக்கூடிய நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று நாளடைவில் பண்பாடாக அமைகின்றன. பண்பாடு என்பது மனிதனின் வாழ்வியல் சடங்குகள், சமூகக் கட்டுப்பாடுகள், மரபுசார் சடங்குகள், நம்பிக்கைகள், இறை வழிபாடு, பழக்க வழக்கங்கள், பண்பாடுகள் ஆகிய கூறுகளை உள்ளடக்கியது எனலாம்.

**இறை வழிபாடு**

ஆதி காலத்தில் மனிதன் இயற்கையைக் கண்டு அஞ்சினான் அவற்றை வழிபடத் தொடங்கினான். பின்னர் அவனுக்கு இறை பற்றிய சிந்தனைகள் வளரத் தொடங்கின. அவன் சார்ந்த நிலத்திற்கு எற்ற கடவுளரை அமைத்துக் கொண்டான் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு கடவுள் என்று வகுத்திருப்பதை,

> **“மாயோன் மேயே காடுறை உலகமும்**
> **சேயோன் மேய மைவரை உலகமும்,**
> **வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
> **வருணன் மேய பெருமணல் உலகமும்” (தொல்.அகத்.5)**

என்ற நூற்பா வழி அறிய முடிகிறது. முல்லை நிலக்காத்தற் கடவுளாகிய மாயோன், மலை வீர அழகுக் கடவுளாகிய சேயோன், வயல்சூழ் மருத நிலக்கடவுளாகிய இந்திரன், கடல் வாழ் மக்களுக்கு உரிய கடவுளாகிய வருணன் ஆகியோர் பற்றிய சிந்தனைகள் பண்டைத் தொல் தமிழகத்தில் இருந்ததை உணர முடிகிறது.

**பண்பு நலம்**

பழந்தமிழர் பண்பாட்டின் நிலைக்களனாய் விளங்கினர். இப்பண்பு நலம் அக்கால மகளிரிடம் சிறந்து காணப்படுகிறது. அச்சம், மடம், நாணம் போன்ற பண்புகள் பெண்களுக்கு உரியன.

> **“அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்**
> **நிச்சமும் பெண்பாற்குரிய என்ப” (தொல் கள .8)**
> **“செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
> **அறிவும் அருமையும் பெண்பாலான” (தொல் பொருள்.14)**

என்ற பெண்களுக்குரிய பண்பு நலன்களைப் பற்றித் தொல்காப்பியர் கூறுகிறார்.

**காதல் நெறி**

இன்பமும், இன்ப உணாச்சியும் மனிதனுக்கும், விலங்கினத்துக்கும் உண்டு ஆயினும் இன்ப உணர்ச்சிக்கும் பலவரையறைகள் வகுத்துக்கொண்டு நன்னெறியில் வாழ்வது மக்கட்

சமூகத்தின் பண்பாடாகும். மற்ற எல்லாவித உயிரினங்களிலும் மேம்பட்டு விளங்கும் மானுடத்தின் வாழ்வு உயர்ந்ததாக கருதப்படுகிறது. இன்ப உணர்ச்சி எல்லா உயிர்களுக்கும் பொது என்பதை

**"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தான் அமர்ந்து உருஊம் மேவற்றாகும்" (தொல்.பொருள்.29)**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இவ்வன்பு ஆண், பெண் இருவரின் மனதில் காதல் நெறியாக மாறுகிறது. களவில் காதலும், காமமும் பெறுகி வளர்கிறது. இது மக்களது வாழ்க்கைக்கு அரண்செய்யும் அறமாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**அறத்தொடு நிற்றல்**

தலைவன், தலைவி என்னும் இருவரும் இயற்கைப் புணர்ச்சியாகிய முதற்காட்சியில் ஒருவரையொருவர் சந்தித்தமுறையில் தூய அன்பொடு பொருந்திய அறத்தின் வழிபட்ட நட்பினை மேறகொள்வர். களவொழுக்கத்தில் ஈடுபட்டுத் தலைவி கற்பு நெறியில் நிற்றலும், அதற்குப் பிறர்துணை நிற்றலும், அறத்தொடு நிற்றலாகும். களவினை பிறர்க்கும் வெளிப்படச் செய்து குறித்த தலைவனுக்கே மணமுடிக்க நிற்றலை அறத்தொடு நிற்றல் என்று குறிப்பிடுவார் தொல்காப்பியர். தலைவி-தோழிக்கும்; தோழி-செவிலிக்கும்; செவிலி-நற்றாய்க்கும்; நற்றாய்-தந்தைக்கும் ஆக நின்று களவுச் செய்தியை நாகரிகமாக உணர்த்துவது தமிழர் பண்பாடுகளில் சிறப்பாகக் கருதப்படுகிறது.

**கற்பு நெறி**

காதலர் இருவரது ஒழுகலாறு களவு என்ற சொல்லால் குறிப்பிட்டு வழங்கப்படுகிறது. களவு கற்பாக மாறகிறது ஆணும், பெண்ணும் மனம் ஒன்றி பெற்றோர். உறவினர் இசைவுடன் மணம் செய்து கொண்ட நிகழவினை.

**"கற்பெனப்படுவது கரணமொடு புணரச்**
**கொளற்குரி மரபிற் கிழவன்கிழத்தியைக்**
**கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள்வதுவே" (தொல்.கற்.1)**

என்ற நூற்ப வழி அறியலாம்.

**திருமணம்**

தாய் தந்தையர் இசையா விட்டால் இருவரும் வேறிடம் சென்று திருமணம் புரிவர்.

**"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டோ" (தொல்.கற்.2)**

என்ற நூற்பா மூலம் அறியலாம்.

**"பொய்யும் வழுவுந் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப" (தொல்.பொரு.4)**

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் சான்றோர் திருமணம் என்ற ஒரு முறையைக் கொண்டு வந்தனர். இச் செய்தியைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். மேலும் எண் வகைத் திருமண முறைகளுள் காந்தருவ முறையையே தமிழர் கையாண்டனர் என்பதற்கு,

**"மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே" (தொல்.பொரு.1)**

என்ற நூற்பா சான்றாக அமைகின்றது.

**இல்லறம்**

பண்டைத் தமிழர் திருமண வாழ்வை இல்லறம் என்றனர். அன்பு-பண்பாகவும், அறம்-பயனாகவும் அமைவது இல்வாழ்க்கை அகவாழ்க்கையில் தலைவன், தலைவி இருவரும் அன்பு உடையோராகவும், அறம் புரிவோராகவும் விளங்கினர்.

**"காமஞ் சென்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (தொல்.பொரு.51)**

இல்லிருந்து இன்பம் அனுபவித்து நன்மக்களைப் பெற்றுச் சுற்றத்தாருடன் நல்லறம் புரிந்து பின் துறவறம் மேற்கொண்டனர் என்பதை இந்நூற்பா வழி அறிய முடிகின்றது.

**விருந்தோம்பல்**

தமிழர் பண்பாட்டில் தலையாய பண்பு விருந்தோம்பல் விருந்து என்றால் புதியவர், புதுமை என்று பொருள், பண்டைத் தமிழர் விருந்தினரை அகமும், முகமும் மலர வரவேற்று உபசரித்தனர் இப்பண்பாடு தொல்காப்பியர் காலத்திலேயே போற்றப்பெற்றது என்பதை,

“புகா அக் காலைப் புக்கெதிப் பட்டுழிப்
பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்
வேளாணெதிரும் விருந்தின் கண்ணும்” (தொல்.கள.17)
“விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்” (தொல்.கற்.5)

என்னும் நூற்பாக்கள் மூலமும் அறிய முடிகின்றது.

**பிரிவு**

தலைவியை விட்டு காவலுக்காகவும், பொருள் தேடுவதற்காகவும் பிரிந்து செல்வதே பண்டைய காலத்துப் பண்பாடுகளுள் ஒன்று இது உறவுக்கு வழிவகுக்கும். பிரிவு என்பது உறவுக்காகத் தான்.

“மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே” (தொல்.அகம்.974)

பிரிவு என்பது நால்வர்க்கும் உரியது என்று தொல்காப்பியம் கூறுகிறது. மேவுகின்ற சிறப்பினையுடைய மக்களை அல்லாத தேவரது பூசையும், விழாவும் முல்லை முதலாகச் சொல்லப் பெற்ற எல்லா நயங்களிலும் மக்கள் தப்பிய வழித் தப்பாது நிறுத்தல் வேண்டியும் செய்யப்பெற்ற பொருட்களை ஆக்குவதற்காகவும் பிரிவு இருக்கிறது.

“அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்” (குறள்: 1153)

உண்மை அறிந்தவரிடத்தும் பிரிவு உள்ளமையால் ஒருவரைத் தெளிதல் அறிதாம்.

**கொடை**

பகைநாட்டில் களவில் சென்று கொணர்ந்த பசுக்கூட்டங்கள் படை வீரர்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தல் நடைபெறும். தனக்குக் கிடைத்ததை மற்றவர்களுக்கு பங்கிட்டு கொடுத்து மகிழும் தமிழரின் உயரிய பண்பினை

“நோயின்றி உயித்தல் நுவல்வழித் தோற்றும்
தந்துநிறை பாதீடு உண்டாட்டு கொடையென” (தொல்.புறத்.61)

என்று தொல்காப்பியம் வழி உணாந்து கொள்ள முடியும். படை மறவர்கள் கள்ளுண்டு மகிழ்ந்தாடும் உவகைப் பெருக்கினால் தம்மை சுற்றி நின்று வேடிக்கைப் பார்க்கும் இரவலர்களுக்குப் பரிசிலாக பசுமாடுகளை கொடுத்தல் கொடை என்ற கூறப்படும்.

**ஆண்-பெண் உரிமை**

சங்க காலத்தில் மகளிர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர் பெண்பாற் புலவர்கள் கவிபாடுவதில் வல்லராக விளங்கினர். சங்காலத்தில் ஆடவர், பெண்டிர் ஆகிய இருபாலரும் கல்வி கற்பதில் சம உரிமை பெற்றிருந்தனர். சங்க காலத்தில் பெண்ணுரிமை பேணப்பட்டது.

“பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ
டுருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே உணயர்வோடு திருவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே” (தொ.பொ.25)

என தொல்காப்பிய கற்பியல் ஆடவர் மகளிரிடையே ஒத்த உரிமை நிலவியது என்பதைக் கூறுகிறது.

**முடிவுரை**

பண்டைதமிழ் மக்கள் அகம் மற்றும் புற வாழ்க்கையில் தனக்கென உயரிய ஒழுக்கங்களை பின்பற்றி வந்தனர். இலக்கிய நூல்கள் மட்டுமின்றி, இலக்கண நூல்களும் தமிழரின் பண்பாட்டை எடுத்துக்காட்டுவதில் சிறப்பிடம் பெறுகின்றன. அவ்வகையில் தொல்காப்பியமும் தமிழர்களின் பண்பாட்டுச் சுவடுகளை சிறப்புற வெளிப்படுத்தியதை இவ்வாய்வின் வழி புலப்படுததை அறியலாம்.

# அண்ணாவின் படைப்புகளில் பெண்ணிய மறுமலர்ச்சி

*கோ.சுசீலா, முனைவர் பட்ட ஆய்வாளர், மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி, காளிப்பட்டி – 637501. நாமக்கல் மாவட்டம், அலைபேசி எண்: 9698416652. மின்னஞ்சல் :gsuseela8@gmail.com.

**முன்னுரை**

அறிஞர் அண்ணாவின் படைப்புகளில் சமுதாய முன்னேற்றமும் சீர்த்திருத்தமும் சம அளவில் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் பெண்ணிய மறுமலர்ச்சி எவ்வாறு கவனப்படுத்தப் பட்டுள்ளன என்று ஆராய்ந்து பார்க்கும் போது அண்ணாவின் படைப்பின் வழி பெண்ணிய மறுமலர்ச்சி எண்ணங்கள் புதிய பெண்ணிய நிலைபாட்டிற்று வழி வகுக்கும், பெண்ணியம் பேணப்படும்.

சமுதாய மாற்றம் காணவும் சமுதாயத்தில் உள்ள சமுதாய அமைப்பு, பண்பாடு, நாகரிகம், மக்களின் பெண்ணுரிமை, பெண் சமத்துவம் போன்ற நெறிகள் அடிமைப்பட்டிருந்த நிலையைப் பல்வேறு காலகட்டங்களில் குரல் கொடுத்து எழுத்தின் வாயிலாகப் புரட்சியை ஏற்படுத்தியவர்களுள் மிக முக்கியமானவதாகக் கருத்தத்தக்கவர் பேரறிஞர் அண்ணா அவர்கள், அண்ணாவின் படைப்புகளில் சமுதாய முன்னேற்றமும் சீர்த்திருத்தமும் சம அளவில் இடம் பெற்றுள்ள அவருடைய அறக் கருத்துகள் எவ்வாறு பெண்ணிய மறுமலர்ச்சிக்கு உதவின என்பதனை இக்கட்டுரை வாயிலாக காணலாம்.

**திருமணம்**

அன்பாகவும் பண்பாகவும் அறப்பயனாகவும் அமைவது இல்வாழ்க்கை பண்டைத் தமிழா் திருமண வாழ்வை இல்லறம் என்றனர். இல்லிலிருந்து அறம் பல புரிந்தும் இல்வாழ்வின் முடிந்த பயனாக அறத்தைப் போற்றியும் வாழ்ந்தனர். ஆகவாழ்க்கையில் தலைவன் தலைவி இருவரும் அன்பு உடையோராகவும் அறம் புரிவோராகவும் விளங்கினர். இதனை

**“காமஞ் சான்ற கடைகோட் காலை**
**ஏமஞ்சான்ற மக்களொடு துவன்றி”** [1]

என்னும் தொல்காப்பிய நூற்பா நெறி வகுத்துள்ளது.

**திருமண நடைமுறைகள்**

சங்ககாலப் பெண் திருமணத்திற்குப் பின் கணவன் வீட்டின் பெருமையினை மட்டுமல்ல கணவனின் உயர்ந்த பண்பினையும் காப்பவளாக இருந்தாள். அதற்கு எடுத்துக்காட்டாய் நாகையார் என்ற பெண்பாற்புலவர் பாடல் ஒன்றைக் கூறலாம்.

**“இன்துணைப் பயிரும் குன்ற நாடன்**
**குடிநான்கு உடையன் கூடுநர்ப் பிரியவன்**
**கெடு நாமொழியலன் அன்பினன் எனநீ**
**வல்ல கூறி வாய்வதின் புணர்ந்தோய்**
**நல்ல காண் இனி காதல் அம்தோழிஇ**
**- - - - - - - - - - - - - - -**
**- - - - - - - - - - - - - -**
**எண்ணுமுறை நிறுத்த பண்ணினுள்ளும்**
**புதுவது புனைந்த திறத்திினும்**
**வதுவை நாளினும் இனியனாள் எமக்கே”** [2]

இதனால் அறியலாகும் செய்தி எண்ணத்தக்கது. அன்புத்தோழியே ஆராய்ந்து பார்க்குமிடத்து நீ மிகவும் நல்லவன். நீ சேர்த்து வைத்த அத்தலைவனானவன் உயர்குடி பிறப்பினன். தன்னுடன் பழகியோரைப் பிரியான். நாவால் கெடுமொழி கூறான். எல்லாரிடத்தும் அன்பினன். இனிய இசைத்தமிழ் நூலின் எண்ணின் முறைப்படி இயற்றிய பண்ணைக் காட்டிலும் அவன் புதுமையாக இயற்றிய திறத்தைக் காட்டிலும் என் தலைவன் எம்மைத் திருமணம் செய்த நாளினும் இப்பொழுது பெரிதும் இனியனாக விளங்குகிறான் என்று தன் தோழியிடம் திருமணம் எய்திய தலைவியானவள் புகுந்த வீட்டின் பெருமையை எடுத்துரைக்கிறாள். இதன் வழியாக இல்லற வாழ்வு சிறக்கவும் கணவனின் பெருமைகளைக் காக்கவும் பெண் தன்னை ஒப்படைத்துக் கொள்கிறாள் என்பதை அறியமுடிகிறது.

தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் ஐந்திணைகளில் நிகழ்ந்த திருமணம் பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன. களவு வாழ்க்கை கற்பு வாழ்க்கை என்று வாழ்வின் தொடக்கமும் வளர்ச்சியும் பற்றிய எண்ணங்களை நெறியுரைத்துள்ளது. களவு ஒழுக்கம் காதலை மையப்படுத்திய செயல்பாடாக இருந்துள்ளது. களவு வாழ்க்கையே களவு மணமாகவும் தமிழர்களின் திருமண முறையாகவும் பெண்ணுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்ட நெறியாகவும் இருந்துள்ளது.

**"வேட்கை யொருதலை யுள்ளுதல் மெலித**
**லாக்கஞ் செப்ப நாணுவரை பிறந்த**
**னோக்குப் வெல்லா மவையே போறன்**
**மறந்தன் மயக்கஞ் சாக்கா டென்றச்**
**சிறப்புடை மரபினவை களவென பொழிப"** [3]

என்று களவுநெறியைத் தொல்காப்பியர் வரையறை செய்துள்ளார். பெற்றோர் ஏற்பாடு செய்யும் முறையுடன் உடன்படாமல் தனக்குப் பிடித்த துறையைத் தாமே தேர்ந்து கொள்வதும் அப்படித் தேர்ந்த பின் ஒருவரையொருவர் எண்ணுவதும் களவொழுக்கத்தின் வெளிப்பாடு என்பதோடு இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியர் கூட்டம் எனப் பல்வேறு நிலைகளில் இந்தக் காதல் செயல்படும் நிலையைத் தொல்காப்பியம் எடுத்துரைக்கிறது.

இல்லற வாழ்வில்இணையும் மணமக்களுக்கு இன்று நாம் பொருத்தம் பார்ப்பது போலவே அன்றும் பொருத்தம் பார்க்கும் வழக்கம் இருந்துள்ளதைத் தொல்காப்பியம் புலப்படுத்துகிறது.

**"பிறப்பே குடிமை, ஆண்மை, ஆண்டொடு**
**உருவு, நிறுத்த காமவாயில்**
**நிறையே, அருளே, உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"** [4]

என்பதால் ஒத்த பிறப்பும், ஒழுக்கமும். ஆண்மையும் ஆண்டும், அழகும், அன்பும், நிறையும், அருளும் அறிவும், செல்வமும் என்னும் பத்து வகையும் தலை மக்கள் இருவரிடத்தும் இருக்க வேண்டிய ஒப்புமைக் குணங்களாகும். இவ்வாறு இருந்த நிகழ்வுகள் மாறி சோதிடத்தில் பொருத்தம் பார்க்கும் நெறிமைகள் தோன்றியுள்ளன.

**விதவை மறுமணம்**

ஆண், பெண் இயற்கைத் தேவைக்காக உருவாக்கப்படுகின்ற திருமணம் எனும் வாழ்க்கை ஒப்பந்தத்தில் இயற்கை செயற்கைத் தவறுகளால் பாதிக்கப்படுவர் பெண்களே. ஆண்கள் இரண்டு மூன்று மணஞ்செய்து கொள்வதும் பெண்கள் உற்ற வயது அடையா முன்னரே திருமணம் செய்து கொடுப்பதும் பெண்கள் இளமையில் கைம்மை எய்தினால் வேறுவழியின்றி நரகிடை வீழ்ந்து வருவது போன்றதாகும் என ஆணுக்கு வழங்கப் பெறும் "உரிமைகள் பெண்ணுக்கு மறுக்கப் படுவதைக் கண்டித்துரைப்பார்" திரு.வி.க. [5]

இத்தகைய அநீதிகள் களையப் பெற்று உலகப் பார்வையில் பெண்கள் உயர்த்தப் பெற வேண்டுமானால், பெண்களின் உயர்வுகள் மதிக்கபெற வேண்டும். ஒத்துரிமை சமுதாயம் அமைவதற்கு அமைவதற்கும் கைப்பெண் மணமும் தக்க வாயிலாகும். அண்ணாவின் "பாமா விஜயம்" "1938 – 40 ஒரு வசீகர வரலாறு" கலப்பு மணம் காதல் மணம் என்னும் மூவகையான திருமணங்கள் நடைபெற்றால் சமுதாயத்தில் நிலவுகின்ற சிக்கல்களுக்குத் தீர்வுகாண முடியும் என்பதனைப் பகர்கின்றன.

இச்சிறுகதைகளில் இடம் பெறும் சுப்பைய்யர் என்பவரின் மகள் கமலா. இவள் இளம் வயதிலேயே விதவையாகிறாள். கைம்மைச் கோலம் பூண்ட தன் மகளின் நிலையைப் பற்றிக் கவலைப்படாத ஐயர். தன்னுடைய இச்சையைத் தீர்த்துக் கொள்ள மட்டும் வள்ளி என்கின்ற பெண்ணோடு தொடர்பு கொள்கிறார். அது மட்டுமின்றி சந்தைப் பேட்டை சமீன்தார் சிங்காரவேலர் என்பவர் பாமா என்ற இளம்பெண்ணை மணந்து கொள்ள துணை நிற்கிறார். ஆனால் பாமாவும் கமலாவும் ஆண் சாதியின் சீர்கெட்ட செயல்களின்று தங்களை விடுவித்துக் கொள்கின்றனர். கமலா மறுமணமும் பாமா காதல் மணமும் செய்து கொண்டு இன்பமாக வாழ்கின்றனர். சமூக அநீதிகளின்று தங்களைக் காத்துக் கொள்ள பெண்கள் துணிவு கொள்ள வேண்டும். அவ்வாறு துணியும் போதே அவர்களின் உரிமைகளை உணர்ந்து கொள்ள முடியும் என்பதனை இச்சிறுகதை உணர்த்துகின்றது.

சத்தியம், கடின உழைப்பு, இறைபக்தி கொண்டு விளங்கும் கண்ணுசாமி என்னும் இளைஞன், கல்யாணி என்று விதவையைத் திருமணம் செய்து கொள்ள விழைந்த போது அவர்களுக்கு உண்டாகும் சிக்கல்களை "1938 -40 ஒரு வசீகர வரலாறு" எடுத்தியம்புகிறது. சொக்கலிங்கச் செட்டியாரின் மகள் கல்யாணி இவர்களின் வீட்டில் கண்ணுச்சாமி என்ற இளைஞன் வேலை பார்க்கிறான். கல்யாணி கண்ணுச்சாமி இடையே காதல் மலர்கிறது. ஆனால் இவர்களின் முடிவை செட்டியர் அவமதிக்கிறார். இவர்களின் உண்மையான உணர்வுக்கு மதிப்பு கொடுக்க வேண்டும் என்பதை இச்சிறுகதை சுட்டுகிறது. [6]

மேலும் இளம் விதவையாக இடம் பெறும் புரோகிதரின் மகளான கமலாவுக்கு சரசா மறுமணஞ் செய்து வைக்கிறாள். இதனைக் கண்ட புரோகிதர் நீ இவ்வாறு செய்து கொள்வதற்குப் பதிலாக கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்கிறார். [7]

குலப்பெருமையைக் கெடுத்து விட்டதாகக் கூறுகிறார். மகளின் வாழ்க்கை மறுமணத்தினால் துளிர்த்திருப்பது அவருக்குப் பெரிதாகப்பட வில்லை தன்னுடைய குலப்பெருமை கெட்டுவிட்டது என்கிறார். சமூகத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மூடப்பழக்க வழக்கங்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு தடைக்கற்களாக இருக்கும் என்பதை உணர்ந்த அண்ணா அதைக் களைய முற்பட்டார்.

**பெண்ணியம் பற்றிய பொது விளக்கம்**

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் பெண்ணியம் மிக இன்றியமையாத பின் நவீனத்துவக் கோட்பாடாக உருபெற்றுள்ளது. சமுதாயத்தில் சரிபாதி மக்கள் மகளிர்தான் உள்ளனர். அகவாழ்வான குடும்ப வாழ்க்கை மகளிரைச் சார்ந்ததாகவே உள்ளது.

சங்ககாலம் முதல் இன்றைய நவீன இலக்கிய காலம் வரையில் குடும்பம். குடும்ப உயர்வு என்பது பெண்களின் கையில் தான் இருந்து வருகிறது. குழந்தைகளைப் பெற்று உருவாக்குதல் ஒரு தாயின் கடமை என்ற கருத்துச் சங்க காலத்திலேயே வலியுறுத்தப்பட்டுள்ளது.

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே" [8]**

என்ற பொன் முடியார் பாடலால் இதனை அறியலாம், சமுதாயத்தில் பெண்களின் பங்கு மிகப்பெரியது என்பதை,

**"மங்கையராகப் பிறப்பதற்கே – நல்ல**
**மாதவம் செய்திட வேண்டுமம்மா!**
**பங்கையக் கைநலம் பார்த்தயவோ - இந்தப்**
**பாரில் அறங்கள் வளருமம்மா!**
**அன்பினுக் காகவே வாழ்பவர் யார்? அன்பின்**
**ஆவியும் போக்கத் துணிபவர் யார்?**
**இன்ப உரைகள் தருபவர் யார்?' வீட்டை**
**இன்கையால் ஒளிசெய்பவர் யார்? [8]**

எனப் புலப்படுத்தியுள்ளார் கவிமணி தேசிக விநாயகப்பிள்ளை. இக் கருத்துகள் எல்லாம் பெண்களை மேம்படுத்தும் பொழுது பெண்கள் பல இடங்களில் தாக்குதலுக்கு உள்ளாகின்றனர். அவர்கள் அடிமை நிலையிலும் கொடுமைப்படுத்தப்பட்ட நிலையிலும்பெரும்பான்மையாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. தங்களுக்காக உரிமைகளை மீட்கும் எண்ணம் அவர்களுக்குத் தோன்றும் போது ஆண் மீதான அன்பின் பிடி மருவி எதிர்க்கும் நிலை வரும் போது அது பெண்ணியம் என்ற போராட்ட வடிவமாகவும் சிந்தனையாகவும் வடிவம் கொள்கிறது.

**பெண்ணியம் என்பதன் பொருள்**

பெண்ணியம் என்பது பெண்கள் ஆண்களுக்கு இணையாகச் சமநிலை பெறுதல், விடுதலை பெறுதல் தங்களின் வாழ்க்கை முறைகளையும் எதிர்காலத்தையும் சுயமுயற்சியால் தாங்களே சுதந்திரத்துடன் நிர்ணயித்துக் கொள்ளுதல் ஆகியவற்றில் ஆணுக்கு இணையாகச் சமஉரிமை கோரும் சமுதாய இயக்கச சொல்லாகும்.

ஆங்கிலத்தில் "Feminism" என்று வழங்கும் சொல்லுக்கு ஈடாகத் தமிழில் பெண்ணியம் பெண்நிலை வாதம் என்ற சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. "Feminism" என்ற ஆங்கிலச் சொல்Femina என்ற இலத்தீன் சொல்லிலிருந்து மருவி எதிர்க்கும் நிலை வரும் போது பெண்ணியம் தேவைப்பாடாகின்றது.

ஆக்ஸ்போர்டு அகராதி பெண்ணியம் என்ற சொல்லுக்குப் பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது போராடுவது என்ற பொருளைத் தந்துள்ளது. [9]

**அண்ணாவின் பெண்ணிய ஆக்கம்**

சங்க இலக்கியம் பதிவுகளில் பெண்மையின் பரிமாணங்களை உய்த்துணரலாம். அதுவும் தாய்த் தெய்வ வழிபாட்டின் மூல ஆதாரக் களமாய் சங்க இலக்கியங்கள் விளங்குகிறது. இதற்கு சித்தர் பாடல்களும் வழிவகுத்துள்ளன. சட்டைமுனி சித்தர்.

**"காணப்பா பூசை செய்யும் முறையைக் கோளாய்**
**கைம் முறையாய்ச் சுவடி வைத்துப் பூசை செய்வார்**
**பூணப்பா சிலபோர்தாம் தீரம் வைத்துப்**
**புகழாகப் பூசை செய்வார் பெண்ணை வைத்தும்" [11]**

எனப் பாடியுள்ளார். இதனால் பெண்வழிபாட்டின் மேன்மையை உய்த்துணரலாம். இவ்வாறு காலத்தோறும் வணக்கத்துக்குரியவளாக அமைந்த பெண்ணின் உரிமையையும் உயர்வையும் இடைக்காலத்தில் எழுந்த புராணங்களும் புரட்டுக்களும் அழிந்துள்ளன. மனித விழுமியங்களை இழந்து பெண்கள் அடிமைப்பட்டுள்ளார். இதிலிருந்து மீளவதற்கு அடித்தளம் இட்டவர் தந்தை பெரியார். பெண்கள் போராட வேண்டிய களத்தை ஆழப்பதிவு செய்தார். அவர்களின் ஆளுமைத்

திறத்தை வளர்த்தார். அவற்றையெல்லாம் சுயமரியாதை இயக்கத்தின் வாயிலாகச் செயல்படுத்தினர் அவர்.

“பெண்களைக் கூண்டுக்கிளி போல் வீட்டில் அடைத்து வைக்க தாய் தந்தையர் முயற்சிக்காதீர்கள். தாராளமாகப் பழக விடுங்கள். இருபது வயதுவரை கண்டிப்பாகத் திருமணம் செய்யாதீர்கள். 20 வயதுக்குப் பின் கேளுங்கள் திருமணம் செய்து கொள்ள இஷ்டமா? பொதுச்சேவை செய்ய இஷ்டமா? என்று திருமணத்தில் இஷ்டமென்றால் நல்ல வரனைத் தேடிப்பிடித்துக் கொள்ளும் வேலையை அவளுக்கே விட்டு விடுங்கள். வேண்டுமானால் ஆலோசனை மட்டும் கூறுங்கள். பொதுச் சேவையில் பிரியம் என்றால், அதற்குத் தாராளமாக வசதி செய்து கொடுங்கள்” [12] என்றார். இவ்வாறு சொன்னதோடு மட்டுமல்லாமல் விருதுநகரில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட தீர்மானங்கள் பெண்ணிய விடுதலையை முன்னிறுத்தியவையாகும். விடுதலையின் விளிம்புகள் பலவற்றையும் இதில் வெளிப்படுத்தினார்.

“பெண்களை 30 வயது வரை படிக்க வைக்க வேண்டும். சாரதா சட்டத்தை அமுல் செய்ய வேண்டும். பெண்களைப் போலீஸ் இலாக்காவிலும் இராணுவத்திலும் சேர்க்க வேண்டும். கணவர் பிடிக்காவிட்டால் விவாகரத்து செய்ய வேண்டும். தேவதாசிச் சட்டத்தை உடனே அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். விபச்சார விடுதிகளை ஒழிக்க வேண்டும். கோவில்களில் பொட்டுக்கட்டுதலைத் தவிர்க்க வேண்டும். பெண்களுக்கு எல்லா இரயில்வே ஸ்டேஷன்களிலும் தனியே தங்கும் அறை தேவை. பகலிலும் இரவிலும் வேலைக்காரப் பெண்கள் நியமிக்க வேண்டும்” [13]

முதலான தீர்மாணங்கள் நிறைவேற்றப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்டபோது அறிஞர் அண்ணா இவற்றில் பெரும்பாலானவற்றைச் சட்டமாக்கினார். மேடைப்பேச்சிலும்தம் எழுத்திலும் இவற்றைக் கவனப்படுத்தினார். அண்ணாவின் பார்வை உலகச் சூழலோடு ஒத்திருந்தன. துமிழினத்தின் மீட்சியில் பெண்ணியப் பார்வையை முதன்மையானதாகக் கொண்டு வந்தார்.

**அண்ணாவின் சிறுகதைத் தலைப்புகளில் பெண்ணியம்**

அண்ணா உருவாக்கிய சிறுகதைகளில் பெண்ணியத்தை முதன்மைப்படுத்தவும் விழிப்புணர்வும் மறுமலர்ச்சியும் ஏற்படும் வகையில் தலைப்புகளை இட்டார். “பாமா விஜயம்”, “தங்கத்தின் காதலன்”, “வள்ளித் திருமணம்”, “வள்ளி நாயகியின் கோபம்”, “நகைத்தாள் நங்கை”, “சமூக சேவகி சாருபாலா”, “கன்னி விதவையான கதை”, “வள்ளிட்ட கதைகளின் தலைப்புகளில் நேரடியாகப் பெண்ணியச் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளார்.

**முடிவுரை**

தமிழகத்தில் மாயுரம் வேதநாயகம் பிள்ளை “பெண்கல்வி” மூலம் பெண்ணியத்தை வெளிப்படுத்தினார். பாரதியார், ஒரு பெண்ணுரிமைப் போராளியாக விளங்கினார். தந்தை பெரியார். அண்ணா, பாவேந்தர் போன்றோர் பெண்களுக்கான செயல் திட்டங்களை முன்னெடுத்தனர். அவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவராகவும் பெண்மறுமலர்ச்சிக்கு வளர்ச்சிப்பாதை அமைத்தவருமாக அறிஞர்அண்ணா அவர்கள் திகழ்ந்துள்ளார். அண்ணா உருவாக்கிய படைப்புகள் அனைத்திலும் பெண்ணியச் சிந்தனையின் சுவடுகள் தெளிவாக உள்ளன. படைப்புகளின் தலைப்புகளிலேயே பெண் விழிப்புணர்வையும் மறுமலர்ச்சியையும் காணமுடிகிறது.

அடிக்குறிப்பு:

1. புலியூர்கேசிகன் (உரை) தொல்காப்பியம், தெளிவுரை பொருள், கற்பு நூற் 51.
2. அகம். பா. 352
3. புலியூர்கேசிகன் (உரை) தொல்காப்பியம், தெளிவுரை, களவியல்.நூ.9.ப.25
4. புலியூர் கேசிகன் தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் நூ. 269 பக்.306 – 307.
5. திரு.வி,க. பெண்ணின் பெருமை ப.140.
6. பரிமளம் அ(தொ.ஆ) அறிஞர் அண்ணாவின் சிறுகதைத் தொகுதி. பாமா விஜயம் ப.29
7. அதே பக்கம்
8. புறநானூறு பா.எண் 312-2
9. தேசிக விநாகயம் பிள்ளை மலரும் மாலையும் ப.148
10. இரா.பிரேமா. பெண்ணியம் ப.1
11. அ. அறிவெளி (உரை) சித்தர் பாடல்கள் தொகுதி 2.ப.
12. தந்தை பெரியார். உயர் எண்ணங்கள், சுயமரியாதை பிரச்சார நிறுவன வெளியீடு ப.72.
13. மேலது ப.73.

# தமிழ் இலக்கியங்களில் மனிதநேயம்

*முனைவர் அ.பாக்கியமுத்து, தமிழ்த்துறை இணைப்பேராசிரியர், திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம், திருநெல்வேலி மாவட்டம்.

**முன்னுரை**

உயிர்களிடத்து அன்பு செய்தலையும் பிற உயிர்கள் பால் ஏற்படும் இரக்க குணத்தையுமே மனிதநேயம் எனலாம். உலக உயிர்களைத் தன்னுயிர் போல பாவித்து அவைகளுக்கு இன்னல்கள் செய்யாமலும், அவைகளின் துன்பத்தைத் தன் துன்பம் போல் பாவித்தலையும் கூட மனிதநேயம் என அழைக்கலாம். மனித நேயம் தமிழ் இலக்கியங்களில் அமைந்துள்ள பாங்கை இக்கட்டுரை எடுத்துரைக்கின்றது.

**மனித நேயம் - விளக்கம்**

தெரிந்தோ, தெரியாமலோ எதிர்பாராமல் ஒருவருக்கு உதவுகின்ற மனப்பான்மையை நாம் மனிதநேயம் எனலாம். ஓர் உயிர் பிறிதோர் உயிரிடம் காட்டும் அன்பு, இரக்கம், அருள், ஈகை, பரிவு, கருணை மற்றும் கனிவு முதலியவை மனிதநேயத்தைக் காட்டும் மெய்ப்பாடுகளாகக் கொள்ளலாம். மனிதநேயம் என்பதற்கு அமெரிக்கக் கலைக்களஞ்சியம், "மனிதநேயம் ஏதேனும் ஓர் ' அரசியலைச் சார்ந்தோ, அல்லது எதனையும் சாராமல் தனித்தோகூட இருக்கலாம் ஆனால் உயிர்துடிப்பு என்னவென்றால் என்று விளக்கம் தருகிறது.

"மனிதனது பெருமையையும் உரிமையையும் மதிக்கும் வகையில் அமைந்த ஒரு கோட்பாடு மனிதனின் ஆளுமைப் பண்புகளை மதிக்கவும், அவனது நலன்களைப் பேணி வரவும், சமூக வாழ்வின் அனைத்துத்துறைகளிலும் மனிதன் முழுமையான வளர்ச்சியைப் பெறவும் இக்கோட்பாடு துணைபுரிகிறது. சமயம் மற்றும் இனவெறிக் கொடுமை சமயக் காழ்ப்பு, மாற்றுக்கோட்பாட்டை வெறுத்தல் ஆகிய அனைத்து இயல்களையும் களைவது இக்கோட்பாட்டின் நோக்கமாகும்" என்ற மனிதநேயத்தை ஃபிரோலோவ் விளக்குகிறார். எனவே மனிதநேயம் உயிர்களுக்குள் ஓர் பிணைப்பை ஏற்படுத்துகிறது. ஒன்றை ஒன்று மதிக்கும் மாண்பை வளர்க்கிறது எனலாம்.

**மனித நேயத்தின் குறிக்கோள்**

மனிதநேயக் கோட்பாட்டின் குறிக்கோள் மனிதனை நடத்த வேண்டும் என்பதாகும். இக்கோட்பாட்டின் குறிக்கோளை எஸ்.போபொவ் இவ்வாறு காட்டுகிறார். மனிதப் பெருமையை உறுதி செய்தல், மனிதனைக் காட்டிலும் எந்த மதிப்பும் உயர்ந்ததன்று என உறுதி செய்தல், மனித உழைப்பை போற்றுதல், மனிதனின் அறிவு, ஆற்றல் ஆகியவற்றில் நம்பிக்கை வைத்தல், மனிதனின் உரிமைக்கு ஏற்பச் சுதந்திரமான வளர்ச்சியை வழங்கல் என்றும் சுட்டுகின்றார். (பார்க்க: ம.நாராயணன், பெரியாரும் மனிதநேயமும், ப.720) ஆகவே மனிதநேயம், மனிதத்துடன் தொடர்புடையது. மனித வளர்ச்சிக்கு உதவக்கூடியது. மனிதனின் அறிவு, ஆற்றலோடு தொடர்புடையது என்பதை அறிய முடிகிறது.

**சங்க இலக்கியத்தில் மனிதநேயம்**

பண்டைய தமிழர்களின் வாழக்கையைக் காட்டும் கண்ணாடி சங்க இலக்கியங்கள், இவை அகம், புறம் சார்ந்த இலக்கியங்களாக விளங்கினாலும் அவை அனைத்திலும் மனிதநேயக் கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. (குறுந்தொகை.3) பாடலில் தலைவி தலைவன் மேல் வைத்துள்ள அன்பானது மனிதநேயமாக மலர்கின்றதை அறிய முடிகிறது. நெய்தற் கலியில் வரும், 133-வது பாடலடிகள் ஒவ்வொன்றும் மனிதநேயத்தின் ஆணிவேர்க் கருத்துக்களாக அமைந்துள்ளது. புறநானூற்றில் கணியன் பூங்குன்றனார். பாடிய, யாதும் ஊரே என்ற 192-வது பாடலானது பாடல் மனிதநேயத்தின் பரந்துபட்ட நோக்கைச் சுட்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாறு சங்க அக, புற இலக்கியங்கள் இல்லற அன்பின் வழியும்,

மக்களின் மனங்களில் இருந்த ஒற்றுமை வழியும் மனிதநேயக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றன.

**நீதி இலக்கியங்களில் மனிதநேயம்**

நீதி நூல்களில் காணலாகும் கருத்துக்கள் நீதியைப் போதித்தாலும் அவற்றின் வழி மனிதநேயக் கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றன. திருவள்ளுவர் திருக்குறள் அருள் உடைமை, அன்புடைமை என அதிகாரங்கள் வகுத்து, ஒவ்வொரு குறள்களிலும் மிக உயர்ந்த மனிதநேயத்தை வலியுறுத்துகிறார்.

**பக்தி இலக்கியங்களில் மனிதநேயம்**

நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றி இறைப் பெருமையை எடுத்துரைத்து மக்கள் மனதில் அருளையும், பக்தி உணர்வையும் உண்டாக்கினர். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க நமசிவாய மந்திரத்தைக் சொல்லி மெய்ப்பொருளைக் கண்டனர். குலசேகராழ்வார்

**"படியாய்க் கிடந்துள் பவளவாய் காண்பேனே"**

**(நாலாயிர திவ்வியபிரபந்தம்.ப.685)**

என்று திருமால் மீது தீராத பக்தியுடன் பாடுகிறார்.

**"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்**
**வாடினேன் பசியினால் இளைத்தே" (திருவருட்பா, 6-ஆம் திருமுறை, பா.62)**

என்று அஃறினை உயிர்கள் வாடுவதைக் கூடத் தாங்க மாட்டாது வள்ளலார் கூறும் கருத்து மனிதநேயத்தின் உச்சத்தை உரைப்பதாக உள்ளது என உலக உயிர்களுக்கெல்லாம் அன்பு செய்யும் மனப்பான்மையுடன் வள்ளலார் பாடுகிறார்.

**"எல்லோரும் இன்புற்று**
**இருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்றும்**
**அறியேன் பராபரமே" (தாயுமானவர், பராபரக்கண்ணி, பா.221)**

என்று தாயுமானவர் உலக உயிர்களின் இன்பத்தைப் பெரிதும் விரும்பும் நிலையைப் பாடியுள்ளார். உலக உயிர்களைத் தம்முயிராகக் கருதி அவ்வுயிருக்கு வரும் துன்பத்தைத் தமக்கு வரும் துன்பமாக எண்ணி வருந்தும் மனிதநேயக் சிற்பிகளாகப் பக்தி மார்க்கத்தில் வந்த அருளாளர்கள் விளங்கினர்.

**இக்கால இலக்கியங்களில் மனிதநேயம்**

நிகழ்கால உலகைக் கண்டு படைப்பாளியின் மன வழியாக வெளிப்படுகின்ற எழுச்சிமிக்க, ஆணித்தரமான அடிப்படைக்கருத்துக்களே இக்கால இலக்கியங்களில் பரவும் ஊடு நூலகமாகவும் அமைந்து கிடக்கின்றன. பெரும்பாலும் இன்றையப் படைப்பாளிகளில் கவிஞர்களே அதிகமாக மனிதநேயத்தைப் படைத்துக் காட்டுகின்றனர். பாரதியார்,

**"எல்லோரும் அமர நிலையை**
**எய்தும் நன்நிலையை**
**இந்திய உலகிற்கு அளிக்கும் ஆம் ஆம்**
**இந்தியா உலகிற்கு அளிக்கும்"**

என்ற வரிகளில் உலக மக்களின் மகிழ்ச்சியான வாழ்வைப் பற்றி எண்ணிப் பாடுகிறார்.

**"எல்லோரும் ஓர் குலம்**
**எல்லோரும் ஓர் இனம்**
**எல்லோரும் இந்திய மக்கள்"**

என்று முழக்கமிடும் பாரதி மக்களிடையே சமதர்ம சமுதாய எண்ணத்தை உண்டாக்கும் விதையை விதைக்கிறார். பாரதிதாசன்,

**"தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்**
**தொல்லுலக மக்களெலாம் ஒன்றே என்னும்**
**தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் ஆங்கே**
**சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே"**

என்று உலக மக்களின் தூய்மையான அன்புள்ளத்தைக் காட்டி, மக்கள் அனைவருமும் ஒன்றே என்னும் தாயுள்ளத்தை வேண்டுகிறார்.

**"எல்லோருக்கும் உலகம் ஒண்ணு**
**இருளும் ஒண்ணு ஒளியும் ஒண்ணு**
**……………………. இரத்தம் ஒண்ணு தானே**
**ஆகமொத்தம் பிறந்ததெல்லாம்**
**பத்தாம் மாதம் தானே"**

என்று பட்டுக்கோட்டையார் வரிகள் உலகப் பொதுமையை வலியுறுத்துகிறது. அனைவரும் சாதி, மத, இனப் பேதமின்றிச் சமம் என்ற உணர்வைப் பட்டுக்கோட்டையார் காட்டுகிறார். நதிகள் பிறக்குமிடம் வெவ்வேறாக இருந்தாலும் அவை சங்கமிக்கும் இடம் கடலாகும் என்ற கருத்தின் வழிக் கண்ணதாசன் மக்கள் பல்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் அவர்கள் ஒன்றுபடுவது மனிதநேயப் பண்பில்தான் என்பதை,

**"இராமன் என்பது கங்கை நதி**
**அல்லா என்பது சிந்து நதி**
**ஏசு என்பது பொன்னி நதி**
**நதிகள் பிறக்குமிடம் பலவாகும்**
**எல்லா நதியும் கலக்குமிடம் கடலாகும்"**

என்ற திரைப்படப் பாடல் வரிகள் காட்டுகிறது. மக்கள் அன்போடு பழகினால் மட்டும் போதாது. மனித நேயத்துடன் பழக வேண்டும் என்பதைக் கவிஞர்.பா.விஜய் அவர்கள்,

**"மீண்டும் சொல்கிறேன்!**
**மனிதர்களே**
**மதத்தைத் தள்ளி வையுங்கள்**
**ஆண்டவனை அதற்கு**
**அப்பால் நிறுத்துங்கள்**
**மனித நேயத்திற்கு வாருங்கள்" (ஒரு தூரிகை துப்பாக்கியாகிறது. ப.42)**

என்ற அடிகளில் வெளிப்படுத்துகிறார்.

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் தொடங்கி இக்கலா இலக்கியங்கள் வரை மனிதநேயத்தை வலியுறுத்தாத இலக்கியங்களே இல்லை எனலாம். ஒவ்வொரு கால இலக்கியங்களும் தங்களின் பாடுபொருளுக்கு ஏற்ப மனிதநேயத்தை வலியுறுத்துவனவாக உள்ளன. மனிதம் சிறந்தால் மானுடம் சிறக்கும். மானுடம் சிறந்தால் மானுடநேயம் சிறக்கும். மானுட நேயம் சிறந்தால் வையம் சிறக்கும் தழைக்கும்.

# புறநானூறு காட்டும் அறச்சிந்தனைகள்

*முனைவர் ர.தமிழ்ச்செல்வி, முதல்வர் (பொறுப்பு), மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை.

**முன்னுரை**

'அறு' என்னும் வினைச் சொல்லடியாகப் பிறந்தது 'அறம்'. 'அறு' என்னும் அடிச் சொல்லிற்கு 'அறுத்துச் செல்', 'வழியை உண்டாக்கு', 'உருவாக்கு' 'துண்டி', 'வேறுபடுத்து' என பலவகை பொருள்கள் வழங்குகின்றன. மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறிமுறைகளே அறம் எனலாம்.[1] உலகில் உள்ள நல்லன எல்லாம், தகுதியாயின எல்லாம், புண்ணியமெல்லாம், ஞானமெல்லாம் அறம்.[2] திருவள்ளுவர் மனம், மொழி, மெய்களின் எண்ணம், சொல், செயலின் தூய்மையே அறம் என்பார்.[3] அத்தகைய அறத்தை சங்ககாலப் பாடல்களில் அடிநாதமாக வைத்து வீரத்தையும், காதலையும் போற்றினர். அவ்வகையில் புறநானூற்றில் உள்ள அறச்சிந்தனைகளை வெளிகொணருவது இக் கட்டுரையின் கருத்தாம்.

**புறநானூற்றில் அறம்**

புறநானூற்றில் பாடல்கள் 182 – 195 வரை அறவுரைப் பாடல்கள் எனலாம், ஆனால் அறக்கருத்துக்கள் மற்ற பாடல்கள் வழி புலவர்கள் எடுத்துரைக்கின்றனர். 'பொதுவியல்' திணைப்பாடல்களும் 'அறம்' உரைக்கின்றது. போர் அறம், ஈகைப்பண்பு, வாழ்வியல் அறங்களை உணர்த்துதல், சமுதாய அறக்கருத்துக்கள் என பலவாறு 'அறம்' விரவியுள்ளது.

**போர் அறம்**

கொலை மலிந்த போர்களத்திலும் அற அடிப்படையிலான வரையரைகள் இருந்தன. போர் குறிப்பு இல்லாதவனோடு பொருதல், தன்கருத்தை வெளிப்படுத்தாமல் நெடுங்காலம் கோட்டையை அடைத்து உள்ளே வாளாவிருத்தல், நாணுத்தகவுடைய செயல்கள் எனப்பட்டது.

சமய நெறிகளைக் கடைபிடிப்போர்க்குப் போரில் விலக்கு அளிக்கப்பட்டது. இரவில் போர் புரிதல் அறமாக கொள்ளப்படவில்லை. வீரர் அல்லாதோரையும், புண்பட்டோரையும், முதியோரையும், இளையோரையும் தாக்குதல் அறமற்ற அறிவிலார் செயலாகக் கருதப்பட்டது.[4]

**"ஆவும் ஆன் இயற் பார்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடையீரும், பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போல் புதல்வர்ப் பெறாஅதீரும்**
**எம் அம்பு கடி விடுதும், நும் அரண் சேர்மின் என**
**அறத்து ஆறு நுவலும் பூட்கை" ……. – புறம் - 9**

என பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடும்போது சங்ககாலப் போர்அறம் வெளிப்படுகிறது. பசு, பசுப் போன்ற இயல்புடைய பார்பனர், பெண்டிர், நோயுற்றவர், பணியாளர், மகப்பேறு இல்லாதவர் பாதுகாப்பான இடங்களுக்கு சென்றுவிடுங்கள், இங்கே அம்புபாயும் போர் நிகழவிருக்கிறது என அறவழி கூறியபின் போரிடும் பாங்குடையவன் இந்த அரசன் என்பது பொருள். போர் நெறிக்கு இலக்கணம் வகுத்துப் போர் முறையில் அறம் வளர்த்த பெருமை சங்கத் தமிழருக்கே உரியது. **'அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்' – (புறம் 62)** என வேந்தர்கள் போற்றப்பட்டனர்.

**ஈகைப்பண்பு / விருந்தோம்பல்**

ஈகை என்பது ஒருவன் தான் படைக்கும் செல்வத்தால் பெறும் பயன் மற்றவர்க்குக் கொடுத்தலாகும். நக்கீரர் மக்களின் பொதுவியல் நோக்காக ஈகை என்பதற்கு,

**"உண்பது நாழி உடுப்பவை இரண்டே**
**பிறவும் எல்லாம் ஒரோக்கும்மே**
**செல்வத்துப் பயனே ஈதல்" (புறம் - 89)** எனம் பாடலடிமூலம் 'நாழி' அளவு உணவும், உடுக்கப்படும் உடை இரண்டைத் தவிர மனிதனுக்கு கிடைக்கக் கூடிய எல்லாப் பொருளையும் கொடுக்க வேண்டும் என்கிறார்.[5] தன்னிடம் உள்ள செல்வத்தை பிறர்க்கு ஈதலால் உண்டாகும் புகழே நிலைத்த பேற்றினை தருவதாக அமையும் என்னும் கருத்தினை, சோழன் நலங்கிள்ளியை வாழ்த்திப் பாடும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார்,

**"திங்கட் புத்தேன் திரிதரும் உலகத்து**
**வல்லாய் ஆயினும் வல்லுநர் ஆயினும்**
**வருந்தி வந்தோர் மருங்கு நோக்கி**

**அருளவல்லை அகுமதி" (புறம் - பா.27: 16-19)**

என்று குறிப்பிடுகின்றார். இதில் செல்வம் நிலையில்லாதது என்பதை உணர்த்துவதோடு, அதனால் பெரும்பயனை அடைவதற்கு முன்னர் அதனைக் கையில் உள்ளபோதே பிறர்க்கு ஈந்து பெருமை தேடிக் கொள்க என அறிவுறுத்துகிறார்.[6]

ஐயாதிச் சிறுவெண்தேரையார் பாடிய பெருங்காஞ்சித்துறைப் பாடல் 'ஈகையை இடைவிடாது செய்க' என்பதை

**"...... வீயாது**
**உடம்பொடு நின்ற உயிரும் இல்லை**
**செய்ந்நீ முன்னிய வினையே" (புறம் - பா – 363, 7 – 14)** பாடல் வழி இன்னல் ஆகிய இறுதிநாள் வருவதற்கு முன்னர் உலகத்தின் மீதான ஆசையை துறந்து நல்வினையாகிய ஈகையை செய்யுமாறு வலியுறுத்துவதைக் காணலாம்.

**"இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி**
**வாழ்தல் வேண்டும், இவண் வரைந்த வைகல்" – புறம் - 367**

என மூவேந்தரின் ஈகைப்பண்பை பாடாண் திணையில் பாடும் ஔவையார் வாழ்த்துவார்.

ஈதல் என்பது தலையாய அறமென்றால் விருந்தோம்பல் பண்பு அதன் வெளிப்பாடு.

**"வரகும் திணையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்து மாறு எதிர்ப்பை பெறா அமையின்**
**குரல் உணங்கு விதைத்தினை உரல் வாய்ப்பெய்து" புறம் 333**

குறிஞ்சி நிலத்தின் வழியில் சென்ற புலவர் அந்நிலத்து வாழும் வேளாண் பெருமகனது மனை நலத்தையும், மாண்பையும், குறிப்பறிந்து உணவு நல்கும் பாங்கினை கூறும் போது, அவனிடத்தே வரகு, திணை இரவலர்க்கு கொடுத்து தீர்ந்தன ஆயின் விருந்தினர் வந்தால் விதைப்பிற்காக வைத்திருந்த திணையை குற்றி உணவாக்கி விருந்து தருவாள் அம்மனைமகள் என்பது பொருள். தம்மிடம் இருப்பதை பகிர்ந்து உடனே விருந்தினர்க்கு வழங்குவது அறத்தின் வெளிப்பாடு. மன்னன் முதல் மக்கள் வரை பசிப்பிணி போக்கிய அறச்செயலே ஈகைப்பண்பின் உச்சம்.

பாண்டவர், கௌரவர் இரு சாரார்க்கும் போர்களத்தில் உதியன் சேரலாதன் பெருஞ்சோறு அளித்து அறச் செயல் ஆற்றினான் என்பதை **"பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்" – புறம் : 2** என்ற அடிகள் உணர்த்தும்.[7]

**வாழ்வியல் அறங்களை உணர்த்துதல்**

நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியின் இயல்புகளாக ஊன் பொதி பசுங்குடையார் உரைப்பன அனைத்தும் **(புறம் - பா – 10)** அரசனுக்குரிய அறங்களாக அமைந்துள்ளன. மண்ணுக்குரிய மாண்புகளுள் செங்கோன்மை சிறந்த மாண்பாகும். அறம் பிறழாமல் நடுநிலை தவறாமல் ஆளும் ஆட்சியே செங்கோன்மை. குடிகளை வருத்திக் கொடுமைப்படுத்தும் ஆட்சி கொடுங்கோன்மையாகும்.[8]

**" நல்லதன் நலனும் தீயதன் தீமையும்**
**இல்லை என்போர்க்கு இனன்ஆ கிலியர்" (புறம்-29)**
**"அறநெறி முதற்றே அரசின் கொற்றம்" (புறம்-57)**

என்பன அரசன் அறநெறி வழி ஆட்சி செய்யவேண்டும் என்பதே புலவர்கள் நிலை.

**' நீர் இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே..."**
.................
**உணவெனப்படுவது நிலத்தொடு நீரே...' (புறம் -18: 18-23)**

என குடபுலவியனார் தலையானங்கானத்து செருவென்ற நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தும் பாடல் வழி, உழவுக்கு அடிப்படை நீர்; பசியும் பிணியும், பகையும் இல்லா நாடே சிறந்த நாடு; அந்நாட்டில் உணவுகுறை இல்லாமல் இருக்க நீர் நிறைய பல நீர் நிலைகளை ஆக்கித் தருதல் வேந்தன் கடன். இம்மண்ணுலகில் நிலைத்த புகழை விரும்புவோர், நீரின்றியமையாமையை உணர்ந்து அதற்கு வேண்டுவன செய்வார். உணவு கொடுத்தோன் உயிர் கொடுத்தோன்; என்பது சிறந்த வாழ்வியல் அறம். உணவு என்பது நிலமும் நீரும், அதை மாசுபடுத்தினால் உலகில் உயிர் நில்லாது என்பது இப்பாடலின் கருத்து. இது எக்காலத்துக்கும் பொருந்தும்.

இவ்வுலகம் இன்றளவும் சிறப்பாக இயங்குகின்றது என்றால் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்பவர் இருப்பதால் என்பதை கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி பொதுவியல் திணைப்பாடலாக கூறுவது அறநிலைபாடலாகும். அப்பாடல் **'உண்டாலம்ம இவ்வுலகம்' (புறம் - பா 182).** அமிழ்தமே கிடைத்தாலும் தனியாக உண்பது இல்லை, வாழ்க்கை கடினம் என வெறுத்தொதுக்குவதும் இல்லை, சோர்வதும் இல்லை, தீய செயல்களுக்கு அஞ்சுவது, புகழ் என்றால் உயிரையும் கொடுப்பது, பழி என்றால் உலகத்தையே கொடுத்தாலும் வாங்க மறுப்பது, மனக்கவலை கொள்ளாமல் இருப்பது, இத்தகைய பண்புடையவர்கள் பிறர்க்கென வாழ்பவர்கள் அவர்களால் இவ்வுலகம் சிறப்பாக இயங்குகிறது என்பது வாழ்வியல் அறக்கருத்து.

**சமுதாய அறம்**

எல்லா ஊரையும் தன் ஊர் எனக்கொண்டாடிய கணியன் பூங்குன்றனார், இன, மொழி, மதம், நாடு கடந்த பொதுமை அறத்தை,

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா" (புறம் - 192: 1,2)**
....................

**பெரியோரை வியத்தலும் இலமே**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே" (புறம் - 192: 12-13)**

எனக்கூறியது சமுதாய அற ஓவியம்.

பெருஞ்சித்திரனார் தன் மனைவியிடம் குமணண் கொடுத்த செல்வத்தை பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்பதை

**"இன்னோர்க்கு என்னாது என்னோடு சூழாது**
**....................**
**எல்லோர்க்கும் கொடுமதி மனை கிழவோயே" (புறம் - 163, 5-7)**

என்பது வறிய புலவர்கள் கூட **'ஈதல் இசைபட வாழ்தல்'** என வாழ்ந்தது புலனாகும்.

உறையூர் முதுகண்ணனார் சோழன் நலங்கிள்ளியைப் போற்றும் பாடலில்

**"சிறப்பில் சிதடும், உறுப்பில் பிண்டமும்**
**கூனும், குறளும், ஊமும், செவிடும்**
**மாவும், மருளும் உளப்பட வாழ்நர்க்கு**
**எண்பேர் எச்சம் என்றிவை எல்லாம்**
**பேதைமை அல்லது ஊதியம் இல்என**
**முன்னும் அறிந்தோர் கூறினர் .....**
**............**
**அதனால் அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்**
**ஆற்றும், பெரும! நின் செல்வம்" (புறம் - பா – 28)**

எட்டு வகையான குறைவுடையது மக்கட்பிறவி என சான்றோர் கூறியுள்ளனர். அத்தகைய குறையில்லாத அரசனே! நீ அறத்தை போற்றி நடப்பவன், உன்னைப் போற்றுபவன் உன் செல்வத்தை பெற்றவனாவான். போற்றாதவர் செல்வத்தையும், அறத்தையும் பெறாதவர். எனவே **"அறத்தை இடையறாது செய்க"** என வலியுறுத்தக் காணலாம்.[9]

**"எவ்வழி நல்லவர் ஆடவர்,**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறம்:187)**

என்பது நல்லன எல்லாம் அறம், அதன்வழிசெல் என உணர்த்தும் சமுதாய அறம்.

இவையனைத்திற்கும் முத்தாய்ப்பாக நல்லது செய்யா விட்டாலும் பரவாயில்லை கெடுதல் செய்யாதீர் என்பதை, நரிவெரூத்தலையார்,

**"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின்" (புறம் - 195: 6-7)**

என்று கூறுவது உலக மாந்த இனம் பின்பற்றவேண்டிய அறச்செயல் எனலாம்.

**முடிவுரை**

கிடைப்பது குறைவெனினும் கொடுப்பது தான் இன்பம். இந்த நிலை அறம். அறம் வாழ்ந்தால் தான் மனிதன் வாழ முடியும்.[10] அந்தவகையில், புறநானூறு காட்டும் அறச்சிந்தனைகள் வழி அரசனும், மக்களும் அறவழி நின்று வாழ்ந்தமை புலனாகும். அறத்தை எடுத்துரைப்பதை புலவர் தம்நெறியாக கொண்டிருந்தனர். அறவழியில் பொருளிட்டி இன்பம் துய்த்து வீடுபேறு அடைவதே தமிழன் 'புறநானூற்றின்' வழி காட்டிய அறச்சிந்தனை.

**சான்றெண் விளக்கம் மற்றும் துணை நூற்பட்டியல்கள்**


1. முனைவர். கா.அரங்கசாமி - "தமிழ் கல்வெட்டுகளில் அறவியல் கோட்பாடுகள் - (பக் -17) – மெய்யப்பன் பதிப்பகம்.
2. முனைவர். கா. அரங்கசாமி - "தமிழ் கல்வெட்டுகளில் அறவியல் கோட்பாடுகள் - (பக் - 18 – மெய்யப்பன் பதிப்பகம்.
3. முனைவர். கா. அரங்கசாமி, அறவியலும் பண்பாடும் - (பக் - 2)
4. முனைவர். இரா. அனுராதா –சங்க இலக்கியத்தில் அறக்கருத்துக்கள் (பக்-134)
5. முனைவர். பா. ரேணுகாதேவி – புறநானூற்றில் அறம் சார்ந்த மரபு சிந்தனைகள் - தமிழ் சிந்தனை மரபுகள் - பன்னாட்டுக் கருத்தரங்கம் -(பக்-2.)
6. முனைவர். ப.சு. மூவேந்தன் - புறநானூற்றில் வாழ்வியல் அறம் - கட்டுரை (பக்-2)
7. கவிஞர் க. இராசமாணிக்கம் - பண்டைத்தமிழர் வாழ்வியல் - (பக் - 200-201)
8. முனைவர் கல்பனா. சேக்கிழார் - புறநானூற்றுத் தமிழர் வாழ்வியல் - ப 200 -201
9. முனைவர். ப.சு. மூவேந்தன் - புறநானூற்றில் வாழ்வியல் அறம் - கட்டுரை (பக்-4)
10. ஞானி-மார்க்சியம் பெரியாரியம் - ஞானியின் மெய்யியல் கட்டுரைகள் - காவ்யா – 2006)

# தமிழ் இலக்கியங்கள் இயம்பும் அறச்சிந்தனைகள்

***சே.சித்ரா,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கே.ஆர். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கே.ஆர்.நகர், கோவில்பட்டி.

**முன்னுரை**

இலக்கியங்கள் யாவும் நற்சிந்தனைகளை வளர்க்கும் நோக்கில் எழுந்தனவாகும். அதனாலே அவை காலத்தால் என்றும் பொன்றாது நின்று நிலவுகின்றன. அவ்வகையில் எழுந்த தமிழ் இலக்கியங்கள் சங்கம் தொட்டு இன்றுவரை சமுதாயத்திற்கு நல்லதொரு வழிகாட்டிகளாய் விளங்கிவருகின்றன. இதனை அவற்றில் பொதிந்துள்ள அறச்சிந்தனைகளால் உணரமுடிகின்றது. அறம் என்ற சொல் பற்றி முனைவர் இரா.சந்திரசேகரன், ப.சரவணன் ஆகிய இருவரும் "அறத்தை நல்ல ஒழுக்கநெறிகளின் தொகுப்பு"[1] என்று கூறுவார்கள். ஹென்ரிச் என்ற அறிஞர், "அறம் என்ற சொல் இயக்குதல், வழிக்காட்டுதல், செயலாட்சி, கொள்கைமுறை, நடத்தை, தகுதி, மரபு, ஒழுங்கு, முன்னுணர்மதி, அரசியல் அறிவுத்திறன், அரசியல் சூழ்ச்சித்திறன் என்றும் வேறு பல பொருள்களையும் உணர்த்துவதாக அமைகின்றது"[2] என்பார். மூதறிஞர் இராஜாஜி, "அறம் தருகின்ற பரந்தபொருள் ஆங்கிலத்திலோ, வேற்றுமொழியிலோ இல்லை"[3]என்று தமிழ்மொழியின் அறம் கூறும் பெருமையை உணர்ந்து கூறுவார். அவ்வகையிலமைந்த இலக்கியப் பொருண்மைகளைக் கவிதைகளால் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**சங்க இலக்கியத்தில்..........**

சங்ககாலம் போர் நிறைந்தகாலம். போரிலும் நல்லறம் பின்பற்றும் மன்னர்கள் வாழ்ந்து, மனிதவளத்தைச் செய்த காலமிது. போரிலும், போருக்கு முன்னரும் அறத்தை அறைகூவலாய் விடுத்தனர். சான்றாக, பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பான்,

**"ஆவு மானியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புல வாழ்நர்க்கு அருங்கட னிறுக்கும்**
**பொன்போற் புதல்வர்ப் பெறாதீரும்**
**எம்அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மின்**" என

அறைகூவல் விடுப்போனாய்,

**"அறத்துஆறு நுவலும் பூட்கை" ( புறம்.9,அடி.1-6 )**

கொண்டோனாய் விளங்கியதை நெட்டிமையார் செய்யுளால் காட்டுகின்றார். பசுக்கள், அந்தணர், பெண்டிர், நோயுற்றோர், மூத்தவருக்குக் கடன்செய்வோர், புதல்வரைப் பெறாதார் இவர்கள் பகைப்புலத்தாராக இருப்பினும் மென்மைத்தன்மை பெற்றவராதலால் போர்த்துன்பத்தினின்று பாதுகாத்தற்குரியவர். அதனால் அவர்கள் பாதுகாப்பான அரண்சேர்க என்று அறத்தின் வழிகூறிய பூட்கை கொண்டவன் என்று கூறி புலவர் பெருமிதவுணர்வு அடைகின்றார்.

போரினால் ஏற்படும் இழப்புத்துன்பம் அளவிடற்கரியது. ஆதலால் கோவூர்க்கிழார் எனும் புலவர், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியின் இடையே நிகழவிருந்த போரை நிகழவொட்டாது செய்துள்ளார்.

**"இரும்பனை வெண்தோடு மலைந்தோன் அல்லன்**
**கடுஞ்சினை வேம்பின் தெரியலோன் அல்லன்**
**நின்ன கண்ணியும் ஆர்மிடைத் தன்றே; நின்னோடு**
**பொருவோன் கண்ணியும் ஆர்மிடைத் தன்றே;**
**ஒருவீர் தோற்பினும் தோற்பதும் குடியே**
**இருவீர் வேறல் இயற்கையும் அன்றே; அதனால்,**
**குடிப்பொருள் அன்று, நும்செய்தி; கொடித்தேர்**
**நும்மோர் அன்ன வேந்தர்க்கு**
**மெய்ம்மலி உவகை செய்யும், இவ் இகலே!" (புறம்.45)**

எனக் கூறியது நாட்டை ஆட்சி செய்யும் அரசும், அவர் சார்ந்த பலரும் சண்டையிட்டுக் கொள்வது நன்மையானதல்ல என்று இக்காலத்துக்கும் கூறும் அறிவுரையாகி இப்பாடல் நாட்டு ஒற்றுமைக்கு உரிய அறமாகியுள்ளது காணலாம்.

ஒருவர் செய்த நன்றியை எந்நாளும் மறத்தல் ஆகாது. அவ்வாறு மறந்தால் உலகில் இழைக்கப்படும் துன்பங்களில் எல்லாம் அது மேலானதாக, உய்வுக்கு மாற்று இல்லாததாக ஆகிவிடும். இதனை, ஆலந்தூர்கிழாரின் பாடல் பின்வருமாறு வலியுறுத்தும் முறையில் எடுத்துரைக்கின்றது.

**"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்**
**மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோருக்கும்**
**குரவர் தப்பிய கொடுமை யோர்க்கும்**
**வழுவாய் மருங்கின் கழுவாயும் உள' என,**
**நிலம்புடை பெயர் வதாயினும், ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்' என,**
**அறம் பாடின்றே" ( புறம். 34, அடி 1-7) என்கிறது**

இப்பாடலில், செய்யத்தகாத செயல்களான பசுமடியறுத்தல், பெருமை கொண்ட மகளிரின் கருச்சிதைத்தல், ஆசிரியர் சொல் தவறுதல் இவற்றுக்கு மாற்று உண்டாம். ஆனால் மாறாகச் செய்ந்நன்றி கொன்றோர்க்கு மீட்சி இல்லையாம் என அறம் சொன்ன சான்றோர் இயம்பியுள்ளது எந்நாளும் எண்ணத்தக்கது.

**அறநூலில்..........**

அறநூல் இலக்கியங்களில் தலைமை சான்ற இலக்கியமான திருக்குறள் அறம் பற்றி கூறுகையில்,

**"மனத்துக்கன் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற." (குறள்.34) என்கிறது.**

இங்கு திருக்குறளார் மனத்தளவிலும் பிறருக்குத் தீங்கு எண்ணாது இருத்தலே உயர்ந்த அறம் என்று விளக்கம் அளிக்கின்றார். மேலும் அறத்தின் வழி, பயன் இதுதான் என்று யாரும் தெளிவுபடுத்திக் காட்டவேண்டாமாம். ஏனென்றால் சிவிகையில் ஊர்தல் போன்ற உயர்ந்த பயனை ஒருவன் அடைதலும், மாறாகக் கீழான நிலை எய்துதலும் ஆகிய இரண்டு நிலைப்படுத்திக் காட்டுகின்றார் வள்ளுவர் பெருந்தகை.

**"அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை**
**பொறுத்தானொடு ஊர்ந்தான் இடை."** (குறள்.37)

என்று குறளாகியுள்ளது.

மானுடராகப் பிறந்தவர்கள் தானம், தவம் என்ற இருபெரும் அறமுயற்சிகள் செய்தாலே வானவர் நாடு தானாகத் திறந்து விடுமென ஔவை தனிப்பாடலால் வெளிப்படுத்தினார்.

"**அரிதரிது மானுட ராதல் அரிது**
**மானுட ராயினும் கூன்குருடு செவிடு**
**பேடும் நீங்கிப் பிறந்த லரிது**
**பேடு நீங்கிப் பிறந்த காலையும்**
**ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது**
**ஞானமும் கல்வியும் நயந்த காலையும்**
**தானமுந் தவமுந் தான்செய லரிது**
**தானமுந் தான்செய் வாராயின்**
**வானவர் நாடு வழிதிறந் திடுமே" (த.பா.57)**

என்று உண்மையான மானுடப் பிறவியாக இருக்க, வாழ்வாங்கு வாழ வாழ்க்கையில் படி நிலைகள் பலவுள்ளன என்று வரிசைப்படுத்தினார்.

**பக்தி இலக்கியங்களில்..........**

பக்தி இலக்கியவாதிகள் பிறவிப்பெருங்கடலைக் கடக்க உதவும் புணையாக இறைவனைக் கருதுவர். மேலும் அவர்கள் புணையாகிய இறைவனை வணங்குதலே அறமாக்கினர். அதனாலே ஆண்டாளும் மனத்தினில் தூய்மையாய், கையினால் பூ மலர்த்தூவி, வாயால் புகழ் பாடி, மனத்தினாலும் அவனைச் சிந்திக்க, பிறவியில் ஏற்பட்ட, ஏற்படும் குற்றங்கள் யாவும் தீயிலிட்ட தூசாகி அழிந்து போகும் என்று கண்ணனின் அருள்தன்மையை, வணங்கும் தன்மையையும் கீழ்வரும் பாசுரத்தால் குறிப்பிடுகின்றார்.

**"தூயோமாய் வந்துநாம் தூமலர்த்தூ வித்தொழுது**
**வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்**
**போய பிழையும் புகுதருவான் நின்றனவும்**
**தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்"**(திருப்பாவை பா.5,அடி.5-8)

கண்ணனை வணங்கினால் இவ்வுலகம் பெறும் செழிப்புகளை ஆண்டாள் பாசுரத்தால் காட்டியுள்ளார். கண்ணனை வணங்க, இவ்வுலகம் அடைதற்கரிய மூன்று வளங்களைப் பெறுமாம்.

அதற்கு பெண்கள் கூட்டுப்பிராத்தனையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று பின்வருமாறு ஆற்றுப்படுத்துகின்றார்.

**"தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து**
**ஓங்கு பெருஞ்செந்நெல் ஊடு கயலுகள**

**பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப**
**தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி**
**வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்**
**நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்"**(திருப்பாவை-பா.3,அடி.3-8)

கண்ணனை வணங்க மாதம் மூன்று முறை மழை பெய்தலோடு, பால்வளம், பசுமைவளம், மீன்வளம், அமைதிவளம் என்ற செல்வ வளங்கள் கிட்டுமாம். இத்தகைய இறைவணக்கத்தில் தன்னலம் கருதாத பொதுநலமான உலகநலம் நிறைந்துள்ளது உணரமுடிகின்றது.

**புதுக்கவிதைகளில்................**

பெண்கள் எட்டும் அறிவினில் எல்லா நிலைகளிலும் உயர்ந்து நிற்கின்ற காலமிது. ஆனாலும் பெண்மையைப் போதை, போகப்பொருளென எண்ணிச் சிதைக்கும் அற அவலநிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதனைப் புதுக்கவிதைகள் பெண் எழுத்துகளால் வெளிப்படுத்தி வருகின்றது.

**"பள்ளி தலமனைத்தும்**
**கோயில் செய்குவோம்**
**என்றான் பாரதி**
**கோயிலையே**
**பள்ளியறையாக்கி விட்டார்கள்**
**பாவிகள்........ (சுமதிஸ்ரீ - தகப்பன்** சாமி - ப.44)

என்று பிஞ்சுக்குழந்தைகளை நசுக்கும் வக்கிரப் புத்தி படைத்தவர்களை இனம் காட்டுகின்றார். மேலும் ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானமாய் இன்னமும் வாழவில்லை என்பதை அடையாளப்படுத்திக் காட்டும் புதுக்கவிதை பின்வருமாறு அமைகின்றது.

**"அகிலத்திற்கு**
**அர்த்த நாரியாய்**
**அறிவித்துக் கொண்டாலும்**
**உள்ளுக்குள்**
**இருக்கத்தான் செய்கிறது**
**ஊர்த்தவ தாண்டவ வன்மம்"** (தகப்பன் சாமி - ப.27)

இதற்குரிய மூலகாரணம், மானுடப்பிறவிகளிடையே மனதில் தோன்றும் தன்னலமே. இத்தன்னலத்தின் காரணமாகவே பெற்றோரை, மூத்தவரைப் புறக்கணிக்கும் போக்கும் நிகழ்ந்து வருகின்றது. இதனை,

**"எப்போதாவது**
**பிள்ளைகள் அனுப்பும்**
**கடிதத்தில்**
**ஒட்டியிருக்கும்**
**பருக்கைச் சோறு.....**
**பெற்றவளுக்கு உணவிடாத**
**பாவம் போக்குமென**
**மனம் தோன்றும்**
**முதியோர் இல்லத் தாயை**
**பரிகசிக்கிறது**
**∴பெவிகால் தடவி வந்த**
**கடிதம்" (தகப்பன் சாமி – ப.45)**

என்று தாயின் தனிமை நிலையைச் சுட்டுகின்றது.

**முடிவுரை**

போரினாலும் மக்கள் துன்பம் அடைதற்கூடாது என்ற சிந்தனை சங்கத்தில் இருந்தது. அற இலக்கியகாலத்தில் யாருக்கும் மனதளவிலும் துன்பம் இழைத்தல் ஆகாது, நன்றியுணர்வோடு வாழவேண்டும் என்ற உயரிய நோக்குகள் இருந்தன. பக்திஇலக்கிய காலத்தில் கடவுளை வணங்குவதும் பொதுநலம் கருதிய உலக நன்மைக்காகவே என்ற சிந்தனை வேரூன்றி வளர்ந்தது. இக்காலத்தில் பெண்மையைப் போற்றவேண்டும் என்று வலியுறுத்தும் போக்கு கவிதைகளில் பெண் எழுத்துகளாலும், ஆண்களாலும் பேசப்பட்டு வருகின்றது. காலந்தோறும் எது தேய்ந்து உள்ளதோ அது மேன்மையுற இலக்கியவாதிகள் தங்களின் படைப்புகளின் கருவாகக் கொண்டு கவிதையாக வடித்து வருகின்றார்கள். இவற்றை சமுதாயம் வெறும் ஏட்டு எழுத்துகளாகக் கருதாமல் நடைமுறை வாழ்க்கைக்குரிய கடனாகக் கருதினால் உலகம் உள்ளளவும் அறம் செழிக்கும் என்பது உறுதியே.

**துணை நின்ற நூல்கள்:**


1. முனைவர் இரா.சந்திரசேகரன், ப.சரவணன் - நாலடியாரில் அறவாழ்வு – ப.2
2. Zimmar henrich, Philosophics of India – p.37
3. க.த.திருநாவுக்கரசு – திருக்குறள் நீதி இலக்கியம் - ப.49

# நாலடியாரில் அறச் சிந்தனைகள்

*முனைவர் செ.யோகம், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, வே.வ.வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் முதலாவதாகத் திகழ்கிறது அறம். அறம் என்பது தனிமனிதனையும், சமுதாயத்தையும் நெறிப்படுத்தும் ஒழுக்கநெறி என்று சான்றோர்கள் கூறுவர். மனிதனின் இவ்வுலக வாழ்வு மட்டுமல்லாது மறுவுலக வாழ்வு சிறப்பதற்கும் அடிப்படையாக இருப்பது அறம். அற வாழ்வு வாழ்ந்ததால் தான் கல்தோன்றி மண்தோன்றா காலத்தே வாழ்ந்த மூத்த நம் தமிழ்க்குடியினர் பார் போற்றும் அறிநெறியாளர்களாக விளங்கினர். மன்னர்களுக்கும், புலவர்களுக்கும், சான்றோர்களுக்கும் அறத்தை வலியுறுத்தினர். பண்டைத் தமிழர் அறத்தின் பால் ஆழமான பற்றுக் கொண்டிருந்தனர்.

“அறம்” என்ற சொல் தொல்காப்பியர் காலம் தொட்டே வழக்கிலிருந்துள்ளது என்பதை “அறக் கழிவுடையன பொருட்பயன்பட வரின்” தொல்.பொ.25 என்ற தொல்காப்பியச் செய்யுளிலிருந்து அறியலாம். சங்க இலக்கிய நூல்கள் அனைத்தும் அகத்தையும் புறத்தையும் பாடினாலும் அதனோடு அறத்தை இணைத்தே பாடியுள்ளன.

**“அறம் நனி சிறக்க”** என்ற அடி ஐங்குறுநூற்றில் காணப்படுகிறது.

**“அறம் கடைப்பாடஅ வாழ்க்கை”** என அகம் சுட்டுகிறது.

இவ்வாறு நமது புலவர்கள் மக்கள் அறத்தோடு வாழ வேண்டும் என்பதை வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் வலியுறுத்தினார்கள். தலைவன், தலைவி சேர்ந்து வாழ்கின்ற வாழ்க்கையை இல்லறம் என்றும், துறவு வாழ்க்கையைத் துறவறம் என்றும் அழைத்தனர். சங்க இலக்கியங்களில் காணப்படும் ‘அறத்தொடு நிற்றல்’ என்ற துறையின் மூலம் அகவாழ்க்கையில் அறம் கடைப்பிடிக்கப்பட்டிருப்பதை நாம் உணரலாம்.

புதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் 11 அறநூல்கள் உள்ளன. இவை வாழ்க்கையின் எல்லாநிலைகளிலும் நாம் அறத்தைப் பின்பற்ற வேண்டும் என்பதை நமக்குக் கற்றுக் கொடுக்கின்றன. இவற்றில் சமண முனிவர்களால் பாடப்பெற்ற நாலடியார் வலியுறுத்தும் அறக்கருத்துக்களைக் காண்போம்.

**“அறமின் அறநெறி” (நாலடி 172)**

என்பதற்கேற்ப நாம் அறவழியை அறிந்து கொள்ள வேண்டும். அதன்பின் அவ்வழியே சென்று அதன் பயனை அடைய வேண்டும். அறவழியில் செல்லும் மனிதனுக்கே பொருளும் இன்பமும் வந்து புகழைத் தருகிறது. முதுமைப் பருவத்தில் பார்த்துக் கொள்ளலாம் என்றிருக்காமல் இளம் பருவத்திலேயே அறம் செய்ய நாலடியார் வலியுறுத்துகிறது. இளமையிலேயே அறச் செயல்களைச் செய்பவர்கள் புண்ணிய உலகத்தை அடைவார்கள் என்பதைக் கீழ்வரும் பாடல் வழி அறியலாம்.

**“என்னானும் ஒன்றுதம் கையுறப் பெற்றக்கால்**
**பின்னாவெ தென்று பிடித்திரா- முன்னே**
**கொடுத்தார் உயப்போவர் கோடில்தீக் கூற்றம்**
**தொடுத்தாறு செல்லும் சுரம்” (நாலடி.5)**

இளமையில் அறம் செய்யாதாவரை முதுமையில் அவர் வீட்டிலிருக்கும் வேலைக்காரி கூட மதிக்க மாட்டாளாம். இதை,

**“மூப்பு மேல் வாராமை முன்னே அறவினையை**
**ஊக்கி அதன்கண் முயலாதான் - நூக்கிப்**

**புறத்திரு போகென்னும் இன்னாச்சொல் இல்லுள்**

**தொழுத்தயாற் கூறப் படும்" (நாலடி.326)**

என்ற பாடலடிகள் மூலம் அறிய முடிகிறது.

ஒருவன் செல்வமுடையவனாக இருத்தல பிறருக்குக் கொடுத்து இன்புறுவதற்கேயாகும். செல்வம் அனைத்தையும் தானே துய்ப்போம் என நினைப்பது அறிவீனம். இதனைப் புறநானூறு

**"உண்பது நாழி உடுப்பவை இரண்டே**

**பிறவும் எல்லாம் ஒரொக்குமே**

**செல்வத்துப் பயனே ஈதல்**

**துய்ப்பேம் எனினே தப்புநபலவே" (புறநானூறு. 189)**

எனக் கூறுகிறது. எல்லா மனிதருக்கும் உண்பது நாழி அரிசி, உடுப்பது அரையாடை, மேலாடை என இரண்டு, பிற உணர்வுகள் யாவும் பொதுவானவை என அறிந்து உதவ வேண்டும். ஈகை செய்யாமல் இருப்பது பல இழப்புகளைத் தந்து விடும் தன்மையது. செல்வம் நிலைத்து நிற்கும் என நினைப்பது தீய எண்ணமாகும். இதை,

**"நின்றன நின்றன நில்லா எனவுணர்ந்**

**தொன்றின ஒன்றின் வல்லே செயின் செய்க**

**சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்**

**வந்தது வந்தது கூற்று" (நாலடி. 4)**

என நாலடியார் கூறுகின்றது. செல்வம் ஓரிடத்தில் நில்லாது. அரசனையும் ஆண்டியாக்கி விடும். என்பதை

**"அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்**

**சகடக்கால் போல் வரும்" (நாலடி. 2)**

என்ற பாடலடிகள் வழி உணரலாம். எனவே நம்மால் இயன்ற அளவு சிறிய சிறிய அறச்செயல்களைச் செய்து கொண்டிருக்க வேண்டும். சிறுதுளி பெருவெள்ளம் என்பதற்கேற்ப, நாம் செய்கின்ற சிறிய நற்செயல்கள் நமக்கு நல்ல பயனைத் தரும்.

**"இறப்பச் சிறிதென்னா தில்லென்னா தென்றும்**

**அறப்பயன் யாமாட்டுஞ் செயக் - முறைப்புதவின்**

**ஐயம் புகூஉந் தவசி கடினளுபோல்**

**ஐவய நிறைத்து விடும்" (நாலடி. 99)**

இப்பாடலில் கூறியுள்ளதைப் போல் நம்மிடம் இருப்பது சிறியது என்று எண்ணாமலும், இல்லை என்று சொல்லாமலும் எல்லோரிடத்தும் அறச்செயல்களைச் செய்ய வேண்டும்.

அவ்வாறு செய்து வந்தால் கொஞ்சம் கொஞ்சமாகப் புண்ணியம் நிறைந்து விடும். இப்படிச் செய்கின்ற அறச்செயல்களே நம் உயிருக்கு பயனைத் தரும் என்பதை,

**"-----------------------------------------------------------------**

**சிறுவரையே யாயினும் செய்தநன் நல்லால்**

**உறுபயனோ இல்லை உயிர்க்கு" (நாலடி. 130)**

என்ற பாடலடிகள் வழி அறியலாம்.

அறத்தை அறிவுறுத்தம் பெரியோரது வாய்மொழியை அறிவுடையோர் பெரும் பயனுடையதாக மதிப்பார்கள். அறச்செயல்கள் செய்யாதவர்களை சிற்றறிவினர் எனச் சாடுகிறது நாலடியார்.

**"நல்லவை நாடொறும் எய்தார் அறஞ்செய்யார்**

**இல்லாதார்க் கியாதொன்றும் ஈகலார் - எல்லாம்**

**இனியார்தோள் சேரார் இசைபடவாழார்**

**முனியார் கொல் தாம் வாழும் நாள்" (நாலடி. 338)**

இவ்வாறு வாழும் வாழ்க்கையை அறம் செய்யாதவர் வெறுக்க மாட்டார்களோ? என்று கேட்கிறது.

அறத்தினுடைய பயனைச் சொல்லியும், அதைக் கடைப்பிடிக்காமல் இருப்பதனால் ஏற்படுகின்ற கேட்டினைச் சொல்லியும், மனிதர்கள் அவசியம் அறச்செயல்களைச் செய்ய வேண்டும். என்று நாலடியார் வலியுறுத்துகிறது.

**“கழிந்தார் இடுதலை கண்டார்நெஞ் சுட்கக்**
**குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி – ஒழிந்தாரைப்**
**போற்றி நெறிநின்மின் இற்றிதன் பண்பென்று**
**சாற்றுங்கொல் சாலச் சிரித்து” (நாலடி. 49)**

இப்பாடலில் பார்ப்பவர் அஞ்சும்படியாக இருக்கும் எலும்புக்கூடு, எல்லோரும் அறத்தைக் கடைப்பிடித்து வாழுங்கள் என்று சொல்கின்றது. எனவே நமது உடலின் நிலையில்லாத தன்மையை உணர்ந்த பிறகாவது அறச்செயல்களைச் செய்யுங்கள் என்கிறது நாலடியார்.

**“மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து**
**சிறுமைப் படாதேநீர்வ வாழமூமின்” (நாலடி. 183)**

மறுஉலகவாழ்விற்கு வித்தாக இருக்கும். அறச்செயலை வாழ்க்கையில் மயங்குதலில்லாமல் கடைப்பிடித்து வாழ வேண்டும்.

இம்மையில் இல்லாது மறுமையிலும் நல்ல கதியை அடையவேண்டுமென்றால் அறச்செயல்களாகிய நல்லொழுக்கம், ஈகை, இரக்கம் போன்றவற்றை வாழ்க்கையில் நம்மால் இயன்றவரை செய்து கொண்டேயிருக்க வேண்டும். ஈகை, பிறரன்பு, நற்செயலகள் பலவாக இருப்பினும் அதனால் கிடைக்கக்கூடிய ஒரே பயன் அறம். இதை நாலடியாரின் பாடல் உவமையோடு கூறுகிறது.

**“ஆவே றுருவின வாயினும்ஆ பயந்த**
**பால்வே றுருவின வல்லவாம் - பால்போல்**
**ஒரு தன்மைத் தாகும் அறநெறி ஆ போல்**
**உருவு பலகொளல் ஈங்கு” (நாலடி. 18)**

ஆக்கள் வேறு வேறு நிறத்தவாயினும், அவ்ஆக்கள் கொடுக்கும் பால் வேறு வேறு நிறத்தவையல்ல. அதே போல் இவ்வுலகில் அறத்தை ஆற்றும் முறைகள் பல செயல்களாக இருக்கலாம். ஆனால் அறம் ஒரே தன்மையுடையது.

மேற்கண்டவற்றிலிருந்து அறம் என்று இம்மைக்குரியது மட்டுமல்ல மறுமைக்கும் உரியது. செல்வத்தின் பயன் பிறருக்குக் கொடுப்பதே ஆகும். இளமை முதலே அறம் செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாது நம்மால் இயன்றளவு அறச்செயல்களைச் செய்து கொண்டே இருக்க வேண்டும். சான்றோர்கள் எப்பொழுதும் அறச்செயல்களைச் செய்து கொண்டேயிருப்பர். அதனால் எப்பொழுது வாய்ப்பு கிடைக்கிறதோ அப்பொழுதெல்லாம் அறம் செய்யுங்கள் என்று நாலடியார் அறிவுறுத்துகிறது.

# கீதாரி நாவலில் அறச்சிந்தனைகள்

***ஆ.ஆவுடையம்மாள்,** பட்டதாரி ஆசிரியை (தமிழ்), அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளி, மாரண்டஅள்ளி.

**முன்னுரை**

கால்நடை வளர்ப்பு உயிர்களோடு தொடர்புடையது என்பதாலேயே இதர தொழில்களைக் காட்டிலும் மனதுக்கு இதம் தருகிறது. பசுக்கள், எருதுகள், ஆடுகள், இவை அனைத்துமே கிராம வாழ்க்கையோடு ஒன்றியவையாக உள்ளன. தன்னை அடித்தால், அவமதித்தால் கூடப் பொறுத்துக் கொள்ளும் மனிதன் தான் வளர்க்கும் பிராணிக்கு இடையூறு விளைவிப்பதை மன்னிப்பதே இல்லை.

**இடையர்கள்**

ஆடு மேய்ப்பவர்களின் வாழ்நாளில் பெரும்பகுதி மனிதர்களை விட ஆடுகளுடனேயே கழிந்து விடுகிறது. ஆடுகளுக்கு மேய்ச்சல் தேடி ஊர் ஊராக அலையும் வாழ்க்கை அனுபவங்களும் இடையர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளும் அவற்றின் தீர்வுகளும், கிராமத்துடனான உறவு நிலைகளும் சாதாரண வாழ்க்கையின் செக்கு மாட்டுச் சூழலில் நெஞ்சுக்கு ஈர்ப்புடையதாக இருப்பதில் வியப்பில்லை.

**இராமுவின் அறவழி**

நாவல் முழுவது இராமு நம்பிக்கைவாதியாகவும், நியாயம், அறத்தின் பாற்பட்டவராகச் செயலாற்றுபவராகவும் உள்ளனர். தள்ளாத காலத்திலும் தான் வளர்த்த மகளின் இறப்பின் சோகத்தைத் தாங்கிக் கொண்டு அவன் மகளை வளர்த்தெடுக்கும் இராமுவின் அறச்செயல் மகிழ்ச்சியேற்படுத்துகிறது. தன்னுடைய வாழ்நாள் முழுவதிலும் தனக்கென்று வாழாமல் பிறர்கென்று வாழ்ந்தார். கள்ளம் கபடமற்ற தூய மனம் கொண்டவர். நேர்மையும், உண்மையையும் அணிகளன்களாகக் கொண்டவர் இராமு கீதாரி என்பதை ஆசிரியர் ஆங்காங்கே எடுத்தியம்பி உள்ளார்.

**இராமுவின் தயாளகுணம்**

இராமு கீதாரியின் வாழ்க்கை முழுவதுமே தன்பயன் கருதாமல் பிறருக்குதவுவதாய் இருக்கிறது. பைத்தியகாரப் பெண்ணின் பிரசவத்தின் போது சிக்கல் ஏற்படுகையில் மனைவியைத் தூரத் தள்ளிவிட்டு ஆடுகளுக்குப் பிரசவம் பார்த்த அனுபவம் துணையாக, இராமு கீதாரி தன் கையை விட்டு தலையைத் திருப்பி குழந்தைகளைத் தாயின் வயிற்றிலிருந்து துணிச்சலுடன் இழுத்துப் போடுவதும், இரு குழந்தைகளில் ஒன்றை யாருமே எடுத்துச் சென்று வளர்க்கப் பொறுப்பேற்காத போது, தானே முன்வருவது மனித நேயப் பண்பின் உச்சம். நாவல் முழுவதும் இராமு கீதாரி நியாயத்துகாகச் செயலாற்றுவதைப் பார்க்கிறோம். பிரச்சனைகளின் போது அவர் மேற்கொள்ளும் முடிவுகளும் அதனைத் தொடர்ந்த செயல்பாடுகளும் அறம் என்ற வகையில் அவர் செயலாற்றுவதைப் பார்க்கிறோம்.

**இருமைகளின் வேறுபாடு**

பைத்தியத்திற்குப் பிறந்த கரிச்சாவை வளர்ந்து ஆளாக்கித் திருமணம் செய்வித்து நல் வாழ்க்கையை ஆடு மேய்க்கும் கீதாரி ஏற்படுத்திக் கொடுக்கிறார். ஆனால் நிலபுலங்கள் உடைய ஊர் முக்கியஸ்தரான கரையங்காட்டு சாம்பசிவமோ கரிச்சாவுக்கு மூத்த சிவப்பியை வளர்த்து அவள் பெரியவளான பிறகு சிவரே பெண்டாள முயற்சிக்கிறார். அதைப் புரிந்து கொண்ட சிவப்பி தற்கொலை செய்து கொள்கிறார். இதன் மூலம் இருமைகளின் வேறுபாட்டுத் துல்லியம் தெள்ளத் தெளிவாக உணர்த்தப்படுகிறது.

**சகிப்புத்தன்மை**

இடையர்களின் வாழ்க்கை சூழல் அவர்களுக்குள் சகிப்புத் தன்மையை வளர்த்திருக்கிறது. தான் செய்யாத குற்றத்திற்காக அடிபடும் போதும், எப்போதாவது தன் கவனிப்பிலுள்ள ஆடு வெள்ளாமையைச் சகித்துக் கொள்ளும் பக்குவம் ஆச்சரியமானது.

சில விவசாயிகள் சரியான கூலியைக் கொடுக்காமல் ஏமாற்றும் போது கூட ஏதும் செய்ய இயலாமல் தமக்குள் தாமே அடங்கிப் போகும் உணர்வு நமக்கு பச்சாத்தாபத்தை ஏற்படுத்துகிறது.

இடையவர்களின் கிடை வருகிறதென்றாலே அக்கிடைகளிலிருந்து ஆடுகள் திருடுவதைச் சில சமூகங்கள் குற்றமாகவே கருதுவதில்லை. அதைத் தமது உரிமையென்று கருதுவது வழக்கத்தில் இருந்தது. அவ்வாறு திருடப்பட்ட ஆட்டுக்கறியைக் கிராமம் முழுவதும் பங்கிட்டுக் கொள்வதும் பழக்க முறையில் இருந்தது. அரைப்பதற்கு அம்மியில்லாமல் ஊருக்குள் சென்று வெஞ்சனம் அரைக்கும் கிடைக்காரப் பெண்களின் சிரமம், அந்தச் சிரமத்துக்கிடையில் கெஞ்சிக் கூத்தாடி அரைத்துக் கொண்டு வருகின்ற சாமர்த்தியம் அரைக்காமலே கூட குழம்பு வைத்து சமையலைச் சமாளிக்கும் திறம் எல்லாமே நாவலில் வெளிப்பட்டிருக்கின்றன. இடையர்களின் பருப்புக் குழம்பும் “இடையன்புளி” என்று அழைக்கப்படும். பச்சைப் புளிக் கரைசலும் நாவுக்கு உணர்வூட்டுபவை. அந்த ருசிக்காகவே இடையர்களுடன் இரவு உணவருந்த விரும்பும் ஊர்காரர்களும் உண்டு.

**பழக்கவழக்கம்**

கொட்டும் மழையில் பிரமங் கொடிகளை அறுத்துப் போட்டு கூளங்களின் மெத்தையில் சுகங்காணும் கிடைக்காரர் வாழ்க்கை பாம்புகளின் மத்தியிலும் இயற்கையோடு இசைந்த வாழ்க்கை. மனித சஞ்சாரமற்ற கடல் நடுவே மன்னார மேய்ச்சல் தடிக்கம் போடும் மணமகனாகத் திருமணம், அண்ணன் இறந்தால் அவன் மனைவியைத் தம்பிக்குத் திருமணம் செய்து வைக்கும் கருணை, சித்தப்பனையும் மணக்கத் தடையில்லாத எளிய மரபுகள் எனப் பல தகவல்களை இந்நாவல் சொல்லி சொல்கிறது.

**தன்னம்பிக்கை**

பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்களை விரிவாகவே பேசப்படுகின்றன. பெண் துணையில்லாத நிலையில் பூப்படையும் பெண்ணின் துக்கம், தன்னை விரும்பும் துணையோடு அக்கணத்தை அனுபவித்து மகிழும் இயற்கையான மனம், தன்னை ஒதுக்கிவிட்டு வேறு துணை நாடும் கணவனோடு வாழ்வதில்லை என்று கைகொள்ளும் வைராக்கியம் எனப் பலவற்றைக் குறிப்பிட இயலுகிறது.

மனிதன் நல்லவனாக உருப்பெற்றாலும் சில உறவுகளால் திசைமாறுவது யதார்த்த வாழ்வின் சிக்கல்களில் ஒன்று இராமுவால் வளர்க்கப் பெற்ற வெள்ளைச்சாமி அவனது அண்ணனின் சுயநல உறவுக்காரர்களால் இராமுக் கெதிராகவும், கரிச்சாவுக் கெதிராகவும் மாறுகின்ற சிக்கல், வள்ளைசாமியின் தகப்பன் சேதுவுக்கு ஏற்படுகின்ற துன்பங்கள் தற்கொலைக்குத் துரத்துவதை இயல்பாகச் சித்தரிப்பதன் மூலமும், கரையாங்காட்டுச் சாம்பசிவத்தின் நடவடிக்கை மூலமும் கொடிய பண்புகள் உணர்த்தப் பட்டுள்ளன.

**செம்மறியாடுகளின் குணவியல்பு**

செம்மறி ஆடுகளுக்கு சென்ற வழியில் திரும்பி வரத் தெரியாது. வழி தவறவிட்ட ஆடுகளை வெள்ளாடுகள் தான் கிடையில் கொண்டு வந்து சேர்க்கும். அதனால் வழிகாட்டுவதற்காக இரண்டு மூன்று வெள்ளாடுகளை வளர்ப்பது போல உலக நடைமுறைகள் அறியாமல் காடுகளில் காலம் கழிக்கும் ஆடு மேய்ப்பவர்களுக்கு வழிகாட்ட புதிய வெள்ளாடுகள் தோன்ற வேண்டுமென ஆசிரியர் கூறுகிறார்.

**முடிவுரை**

அறுவடையான வயல்களில் அடுத்த விளைச்சல் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக செம்மறியாட்டுக் கிடைகட்டும் ஆட்டுக்காரர்களின் மனநிலை, தன் வயிறு காய்ந்தாலும் கூட ஆடுகள், குட்டிகளின் வயிறு எப்போதும் நிறைந்திருக்க வேண்டும் என்று எண்ணும் பெண்ணின் மனநிலை, ஆடுகளை சொத்தாக நினைத்து சாக்குக்குள் கால் நுழைத்துப் படுத்துத் தூங்கும் மக்களின் வாழ்க்கை நிலை, மற்றவர்களை எதிர்த்துப் பேசாமல் அமைதி காக்கும் சூழ்நிலை போன்ற அவலநிலைகள் ஆங்காங்கே அறத்தின் வகைமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. ஒரு குறிப்பிட்ட இனத்தின், வட்டாரத்தின் வாழ்க்கை முறையை விவரிப்பதாக இருந்தாலும் இந்நாவலில் நடமாடுகிற மனிதர்களின் வாழ்க்கையிலிருந்து பொதுவான அறச்சிந்தனைக்கு, அதன் உயர்வுக்கு ஏற்ற பாத்திரமாக இராமு கீதாரியைக் குறிப்பிடலாம்.

# புதுமைப்பித்தன் சிறுகதைகளில் அறச்சிந்தனைக் கருத்துகள்

*ப.விசாலாட்சி, ஆய்வியல்நிறைஞர் (பகுதிநேரம்) தமிழ்த்துறை, பத்மவாணி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம்-11.

**முன்னுரை**

அறு என்ற வினைச்சொல்லின் அடியாகப் பிறந்ததே 'அறம்' என்னும் சொல். இச்சொல்லுக்கு அறுத்துச் செல் வழியை உண்டாக்கு, உருவாக்கு, துண்டி, வேறுபடுத்து என்ற பலவகைப் பொருள்கள் வழங்கி வருகின்றன. இத்தகைய சொல் ஆராய்ச்சியின் அடிப்படையில் அறம் என்னும் சொல்லிற்கு பின்வருமாறு விளக்கம் கூறலாம்.

மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர். பிறவிதோறும் மனிதனைப் பற்றிக்கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என்ற ஆன்மீக விளக்கமும் இதற்கு தரப்படும்.

**அறம் பற்றிய கருத்து**

நம் முன்னோர் அறம் என்னும் சொல்லிற்குத் தந்துள்ள விளக்கத்தோடு எதிக்ஸ் "Ethics" என்னும் ஆங்கிலச் சொல்லிற்குத் தரப்படும் பொருள் விளக்கம் மிகவும் பொருந்துவதாக உள்ளது. நல்ல அல்லது தீய செயல்கள் மூலம் தானே வெளிப்படும் மக்களுடைய நடத்தையையும் பற்றிய ஆய்வியல் கலையே 'எதிக்ஸ்' என்பதாகும். இதனை தமிழில் 'அறவியல்' எனலாம்.

எதிக்ஸ் என்னும் சொல் பழகிப்போன நடத்தை, வழக்கம், மரபு என்னும் பொருள்களையே உணர்த்தி வந்தது. பின்னர் நடத்தை என்னும் பொருளே போற்றப்பட்டது. ஒழுக்கத்தை குறிப்பிடும் Moral என்ற ஆங்கிலச் சொல் பழக்கவழக்கம் பொருளை குறிக்கும். இதனால் மனித நடத்தையை குறிக்கும் ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் வாழ்க்கையை கொள்ளும் முடிவையே ஒழுக்கமாக கொண்டனர் என்பது புலனாகிறது.

இதனால் தனிமனித நடத்தை பெரும்பாலோனரால் பின்பற்றப்பட்ட பொழுது ஒழுக்கமெனும் பண்பால் மலர்ந்து மாண்புற்றது எனலாம்.

> **"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**
> **ஆகுல நீர பிற"        (குறள்.34)**

**அறத்தின் அடிப்படை**

எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும் தூய்மையாக அமையும். எண்ணம் எழுவதற்கு மனத்தின் மாசினைப் போக்குவதற்கு முயலுவதே அறமாகும். 'மனது' என்பது பொறாமை, போராளி, வெகுளி, கடுஞ்சொல் ஆகியவை எல்லாம் இருப்பது அறம் ஆகும்.

**புதுமைப்பித்தனின் அறச்சிந்தனைகள்**

புதுமைப்பித்தன் தன் கதையின் வாயிலாக நட்பு, சமூக சிந்தனை, இல்லறவாழ்வு, ஒழுக்கம், விருந்தோம்பல் பண்பு, விழுமிய வாழ்வு தனிமனித ஒழுக்கநிலை, பெண்ணியம் பற்றிய கருத்துகளை அறியமுடிகிறது. புதுமைப்பித்தன், தனது உள்மன உணர்வுகளையும் சமூகத்தின் அவலங்களையும் தனது படைப்பின் மூலம் ஆசிரியர் படைத்துள்ளார். பெண்கற்பு நிலை கைம்பெண்களின் அவலநிலை, பெண்ணடிமை, சமூகசீர்திருத்தங்கள், ஒதுக்கப்பட்ட விதவைநிலை, தனிமனித பலவீனம் போன்றவை புதுமைப்பித்தனின் கதைகள் வாயிலாக அறியமுடிகிறது.

**புதுமைப்பித்தனின் நட்பு அறம்**

'தெருவிளக்கு' என்னும் கதையில் ஒரு வயதான கிழவன் அவனுக்கு தோழனாக ஒரு தெருவிளக்கை வைத்திருக்கிறார். இதனை,

“விளக்கிற்கு கிழவன்
கிழவனுக்கு விளக்கு”

என்று ஆசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார்.

தெருவிளக்கிற்கும் இப்பொழுது மூப்புபருவம். நிற்கும் கல் உடம்பு சிறிது சாய்ந்து விட்டது சிரத்தில் இருந்த கண்ணாடிச் சீல் ஒரு பக்கம் உடைந்துவிட்டது. அந்த மூப்புநிலை எய்திய தெருவிளக்கிற்கு ஒரு கிழவன் தோழனாக இருந்தான். ஒரு நாள் பயனில்லா தெருவிளக்கு அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டது. துக்கம் தாளாத கிழவனும் மறுநாள் இறந்து போகிறான். ‘ஒரு நாள் கழிந்தது” என்ற கதையில் வரும் முருகதாசரது குழந்தை அலமு பல்லுமாமா என்று அழைக்கிறாள். ‘முருகதாசரின் நண்பர் சுப்பிரமணிய பிள்ளைக்குக் கொஞ்சம் உயர்ந்த பற்கள் அவை வெளியே நீண்டு கொண்டு, தமது இருப்பை அனாவசியமாக உலகத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தன. எனவே குழந்தை நட்புடன் அவரை பல்லுமாமா என்று அழைத்தது”

“நன்றி அறிதல், பொறையுடைமை இன்சொலோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை”(ஆசாரக்கோவை)

இது மிஷன் யுகம் என்ற கதையில் வரும் கிருஷ்ணன் உணவு. விடுதியில் பரிமாறுபவராக வேலை செய்கிறார். உணவு விடுதிக்கு வரும் வாடிக்கையாளர் ‘சாப்பிட்டு முடித்து அவர் எழும்போது அவரது கைக்குட்டை கீழே தவறி விழுகிறது. கைக்குட்டை கீழே விழுவதை பார்த்த கிருஷ்ணன் அவரிடம் உங்களது கைக்குட்டை கீழே விழுந்துவிட்டது என்று கூறி அதை எடுத்துக்கொடுக்க கீழே குனிந்தான்” இதன் மூலும் விடுதியில் வேலை பார்ப்பவருக்கும் வாடிக்கையாளருக்கும் உள்ள நட்பு நிலையை ஆசிரியர் எடுத்துக்காட்டுகிறார்.

“யானை அனையவர் நண்புஒரீஇ நாயணையார்
கேண்மை தழீஇக் கொளல் வேண்டும்” (நாலடியார்)

“மகாமாசனம்” என்ற கதையில் ஒரு பிச்சைக்கார கிழவன் தகரப் பீப்பாயைப் பிடித்துக் கொண்டு செத்துக் கொண்டிருந்தான். மற்றொரு பிச்சைக்காரன் தொண்டையை நனைக்க முயன்று கொண்டிருந்தான். அது குழந்தைக்கு நல்ல வேடிக்கையாகத் தோன்றியது. “இன்னும் ஒரு தரம் அப்படிக்காட்டு” என்றது. பட்டாணி வாங்கிக்குடேன் என்று ‘ஒரு புத்துட்டு’ அவன் கைவசம் நீட்டியது. இதன்மூலம் பிச்சைகார கிழவன் மீது குழந்தைக்கு ஏற்பட்ட நட்பை விளக்குகிறார் ஆசிரியர்.

“புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்” (திருக்குறள்-785)

ஒருவரிடம் நட்புக் கொள்வதற்குத் தொடர்பும் பழக்கமும் வேண்டியதில்லை. இருவரின் உள்ளங்களும் ஒன்று உணர்ச்சியே நட்பின் உரிமையை உண்பிக்கும் என்கிறார் வள்ளுவர்.

“ஆற்றுதல் என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பு எனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்” (கலித்தொகை-நெய்தல்,16)

**வாழ்வின் விழுமியங்கள்**

‘ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும் நடத்தை முறைக்கும் எவை எவை அவசியமென்று கருதப்படுகின்றதோ அவையே அப்பண்பாட்டினரின் விழுமியங்கள் (Values) என்பர்” சீ.பக்தவத்சலபாரதி. மக்களின் அகத்தூய்மைக்கு பண்பு, பண்பாடு, பண்புடைமை எனப்பெயர் பெற்றிருத்தல் மிகவும் பொருத்தமுடையதாகும். சமுதாய விழுமியங்களில் மணவாழ்க்கை முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு சமுதாயத்தின் உயர்வுக்கும், தாழ்வுக்கும் அச்சமுதாயத்தில் உள்ள குடும்பங்கள் அடிப்படையாய் அமைகின்றன. தமிழ் பண்பாட்டில் பண்புசார்ந்தும், கற்பு சார்ந்தும், நெறி சார்ந்தும் மாந்தர் பெறும் விழுமியங்களை காணமுடிகிறது.

**பண்புசார் விழுமியங்கள்**

பெண்ணைச் சார்ந்தே தம்வாழ்வு அமைவதை ஆடவன் அறிந்திருந்தான். எனினும், இனக்கவர்ச்சியால் பொருந்தா துணையை தேர்ந்திடின் வாழ்வு கேடுறும் என்பதால் தலைவன், தலைவிக்கான பண்புடைமை தொல்காப்பியம்

“பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவ நிறுத்த காமவாயில்

**நிறையே அருளே உணர்வொடு திரு என**

**முறையறக் கிளர்ந்த ஒப்பினது வகையே" (தொல்.மெய்.1219)**

என ஆணும் பெண்ணும் மனத்திற்குரிய தகுதிகளை வரையறைப்படுத்துகிறது.

**இல்லற மேண்மை**

தொல்காப்பிய பாத்திர உருவாக்கத்தில் தலைவனுக்கு நிகரான இடம் பெறுபவள் தலைவி,

**"கற்புங் காமமும் நல்லொ ழுக்கமும்**

**மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்**

**விருந்துபுறத் தருதலுஞ் சுற்றம் ஓம்பலும்**

**பிறவு மன்ன கிழவோன் மாண்புகள்" (கற்பு. 1098)**

என தலைவிக்குரிய பண்புகளை சுட்டும் கற்பியல் நூற்பாவின்வழி மனைவி என்பவள் கற்புடையவளாகவும், நல்வழி ஒழுகுபவளாகவும் பொறுமையும் விருந்தோம்பலும் சுற்றம் பேணலும் சகிப்புத்தன்மையும் இவை போன்ற பிற பண்புகளும் பெற்று திகழவேண்டும் என்ற பெண் குறித்த கருத்துமூலம் அறியமுடிகிறது.

**கற்புசார் விழுமியங்கள்**

கல்லினைப் போன்று (கல்+பு =கற்பு) ஒழுக்கநெறியில் திண்மையாய் இருப்பது கற்பு எனப்படும். கணவனும், மனைவியும் இணைந்துவாழும் இல்லறவாழ்க்கையில் கற்பு என்னும் மதிப்பீடு இருவர்க்கம் வேண்டற்பாலது.

தலைவியை தனதூரில் மணந்து கற்பு எனும் விழுமியத்தை நிலைநிறுத்துவதை

**"கற்பெனப்படுவது கரணமொடு புணரக்**

**கொளற்கரி மரபிற் கிழவன் கிழத்தியைக்**

**கொடைக்குரி மரபினோர் கொடுக்கக் கொள்வதுவே" (தொல்.நூ.)**

எனும் தொல்காப்பியக் கூற்றின் வழியாக அறியமுடிகிறது.

கற்பு என்பது ஆணுக்கும், பெண்ணுக்கும் பொதுவில் வைக்கப்பட்ட தெனினும், தலைவி

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**

**செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல்.களவியல் 1059)**

தலைவியை விடுத்து தலைவன் பரத்தமை ஒழுக்கம் மேற் கொள்ளும் போது அதை வலிந்து கடிதல் இல்லை. மாறாக

**உணர்வயின் வாராஊடலுற்றோள் வயின்**

**உணர்த்தல் வேண்டிய கிழவோன் பால்நின்று**

**தான் வெகுண் டாக்கிய தகுதிக்கண்ணும் (தொல்.கற்பியல் 1096)**

என ஊடலுற்ற தலைவியை தோழிவாயில் உடன் படுத்துவதின்வழி கற்புசார் விழுமியங்கள் பெண்ணுக்கு மட்டுமே அளிக்கப்படுவதை அறியமுடிகிறது. எனினும் தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்தம் விதமாக தலைவனின் புறத்தொழுக்க சீர்கேடுகளை தொல்காப்பியம் காட்டுகிறது.

**நெறிசார் விழுமியங்கள்**

மக்களின் நடத்தை முறைகளையும் செயற்பாடுகளையும் முறைப்படுத்தக்கூடிய விதிகளே நெறிமுறைகளாகும். பண்பாட்டின் வளர்ச்சிக்கு அரணாக நிற்கும் நெறிமுறைகளை மக்கள் பின்பற்றுவது அவசியமாகிறது. அதுவே சமூக ஒழுக்கமாக வரையறை செய்யப்படுவதாடு நெறிகளை பின்பற்றுவதைச் சார்ந்தே அவ்வினம் சார்ந்த பண்பாட்டு விழுமியங்கள் அனுசரிக்கப்படுகின்றன. இத்தகைய நெறிசார்ந்த விழுமியங்களை தொல்காப்பியமாந்தர் வழி வலியுறுத்துவதைக் காணமுடிகிறது.

பெண் என்பவள் அடக்கமானவளாகவும், புற உலகம் அறியாதவளாகவும் காட்டப்படுகிறாள். இதனை

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த**

**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப" (தொல்.களவு.1045)**

தனது உள்ளத்தில் தோன்றும் காதல் போன்ற உணர்வை தானே புறத்தோர்க்கு வெளிப்படுத்தாதவளாகவும் உள்ளாள்.

**குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை**

**நெறிப்பட வாரா அவள்வயி னான (தொல்.களவு 1054)**

என குறிப்பினால் உணர்த்துபவளாக இருபபது பெண்ணுக்கு அடக்கம் என்ற நெறிமுறைகளால் மதிப்பாகிறது.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**

**உயிரினும் ஓம்பப் படும்" (குறள்-131)**

ஒருவற்கு அனைத்து சிறப்புகளையும் தருவது ஒழுக்கமே ஆதலால் அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிக்காத்தல் வேண்டும்.

**பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்**

**தேரினும் அ.ஃதே துணை (குறள்-132)**

எம்முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே நல்லதுணைஆகும். ஒழுக்கத்தைக் காப்பது கடினமானாலும் எப்பாடுபட்டாவது அதனை விரும்பிக் காத்தல் வேண்டும்.

**நீதிசார் விழுமியங்கள்**

சிலப்பதிகாரம் மதுரைக்காண்டம் வழக்குரைக்காதையில் பாண்டிய மன்னன் கண்ணகியிடம் கூறும்போது,

**'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே**

**என்காற் சிலம்பு மணியுடை அரியே எனத்**

**தேமொழி யுரைத்தது செவ்வை நன்மொழி**

**யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே**

**தருகெனத் தந்து தான்முன் வைப்ப (சிலம்பு.வழக்கு)**

'கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று அதுவே அரச நீதி என்று கூறினான். அதற்குக் கண்ணகி அறநெறியில் செல்லாத அரசனே என் காற்சிலம்பு மாணிக்க பரல்களைக் கொண்டது என்றாள். அதற்கு அரசன் நீ கூறியது நல்லதே எம்முடை சிலம்பின் பரல்கள் முத்துக்களே என்றான்.

மக்களால் நன்கு மதிக்கப்பெறும் ஒழுக்கமுடையவர்களை உயர் திணைப்பாற் படுத்தும் அ.ஃதில்லாரை அ.ஃறிணைப் பாற்படுத்தும் வழங்குவது பண்டையோர் நெறி இதனை

**உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே**

**அ.ஃறிணை என்மனார் அவரல பிறவே" (தொல்.432)**

என்னும் தொல்காப்பிய நூற்பா உணர்த்தும் இவ்விலக்கணத்தை ஒட்டியே

**ஒழுக்க முடைமை இடிமை இழுக்கம்**

**இழிந்த பிறப்பாய் விடும்" (குறள்.133)**

என்னும் குறளில் அமைந்துள்ளது.

அறத்தின்மேல் உள்ள ஆர்வத்தால் வள்ளுவர் பழையன கழித்துப் புதியன புகுத்தி திருக்குறளை அறமணங் கமழச் செய்துள்ளார். அறம் என்னும் சொல்லிற்கு நம் முன்னோர்கள் தந்துள்ள விளக்கமும், ஆங்கில சொல்லிற்கு எதிக்ஸ்க்கு கொடுக்கப்படும் விளக்கமும் ஒத்திருப்பதை அறியமுடிகிறது. புதுமைப்பித்தனின் தெருவிளக்கு எனும் கதையில் நட்புஅறம் காணப்படுகிறது. மேலும் ஒருநாள் கழிந்தது, இது மிஷன் யுகம், மகாமசானம், என்னும் கதைகளிலும் நட்பையும் அன்பையும் உணரமுடிகிற விருந்தோம்பல் பண்பு திருக்குறள்வழி அறியமுடிகிறது. தமிழர் பண்பாடு பண்பு சார்ந்தும் ,கற்பு சார்ந்தும் நெறிசார்ந்து மகளீர்களின் ஒழுக்கபண்பு வெளிப்படுவதை சங்க இலக்கியங்கள் வாயிலாக கண்டுணர முடிகிறது. சிலப்பதிகாரத்தில் மதுரை காண்டம் வழக்குரைக்காதையில் கண்ணகியின் நீதியியலைஅறியமுடிகிறது. ஒழுக்கம் என்ற பண்பினால்தான் ஒருவருக்கு அனைத்து சிறப்புகளும் கிடைக்கும் என்பதையும் அவ்வொழுக்கத்தை எப்பாடுபட்டாவது உயிரினம் மேலானதாகக் கருதிக்காத்தல் வேண்டும் என்பதையும் திருக்குறள் வாயிலாக அறியமுடிகிறது. புதுமைப்பித்தனின் சிறுகதையில் முத்துக்கள் பத்து வாயிலாக சங்ககாலமட்டுமின்றி தற்கால 19,20,21- ம் நூற்றாண்டிற்கும் மனித வாழ்க்கைக்கு தேவையான அறச்சிந்தனைகளை வழங்குவதாக அமைந்துள்ளது.

# பாவலர் நாச்சியப்பன் கவிதைகளில் வாழ்வியல் அறம்

***முனைவர் திருமதி ஜெ.காவேரி,** தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியை, வே.வ.வன்னியப் பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்.

இலக்கியம் என்பது காலத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி மக்களின் வாழ்வியல் வழிகாட்டி மக்களுக்கு ஓர் இலக்கினை அறிவுறுத்தக் கூடியதாக விளங்கக்கூடியது என்று கூறிக் கொண்டே செல்லலாம். எனில் இலக்கியங்களானது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருட்களை விளக்குவதாய் இருக்க வேண்டும். அப்படி இருக்கும் இலக்கியங்களே மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்து, காலங்கள் பல கடந்து நிற்கும். அப்படி இல்லாத இலக்கியங்கள் மின்மினிப் பூச்சியாய் தோன்றிய சில காலங்களிலேயே அழிந்து விடும். அவ்வகையில் தமிழ்நாட்டில் பாரதிதாசன் பரம்பரையைச் சார்ந்த கவிஞர்களுள் ஒருவரான கவிஞர் நாச்சியப்பன் கவிதைகளில் இடம்பெறும் வாழ்வியல் சார்ந்த அறங்களை ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

'பொன்னி' இதழில் பாரதிதாசன் பரம்பரையில் இரண்டாவதாக அறிமுகமான கவிஞர் நாச்சியப்பன் அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம் ஆத்தங்குடியில் 13.07.1927இல் பிறந்தவர். இவரது பெற்றோர் சித.நாரா.நாராயணன் செட்டியார், அன்னபூரணி ஆச்சி. அச்சகத் தொழிலை மேற்கொண்டவர், கவிதை, சிறுகதை, கட்டுரை, புதினம், கதைப்பாடல் எழுதுவதில் வல்லவர். இவர் இளம் வயதிலேயே பாவேந்தர் மீது மிகுந்த ஈடுபாடு உடையவர். இளமைக் காலத்திலேயே, பாவேந்தரைத் தம் ஊருக்கு அழைத்து இலக்கியக் கூட்டங்கள் நடத்திய பெருமைக்குரியவர்.

1940-1950இல் பொன்னி இதழின் துணையாசிரியராக இருந்த நாச்சியப்பன், 1945இல் ஐங்கரன் எனும் கையெழுத்து ஏடு நடத்தியும், ஆத்தங்குடியில் திராவிடர் கழகம் தொடங்கியும் பெரியாரிடம் பாராட்டு பெற்றவர். 1948இல் 'கொய்யாக் காதல்' எனும் காவியம் எழுதி வெளியிட்டார். இவர் 1975இல் 'இளந்தமிழ்' என்ற ஏட்டினைத் தொடங்கி நடத்தினார். இவர் நாற்பதுக்கும் மேற்பட்ட படைப்புகளைப் படைத்துள்ளார். சிறுவர்களுக்காக பல கவிதைகளையும் கதைகளையும் படைத்துள்ளார். இவர் இயற்றிய பாடல்களின் இரு தொகுதிகளும் 1980-1981களில் வெளிவந்தன. சிறுவர் பாடல்கள் மட்டுமல்லாது, திறனாய்வுகளையும், புதினங்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். பாரதிதாசன் வழியிலேயே கடவுள் மறுப்பு, தமிழ்ப்பற்று, சமுதாயப் பார்வை, பகுத்தறிவு முதலான பொருண்மைகளில் இவர்தம் கவிதைகளில் அமைந்துள்ளன.

**சமூகம்**

சமூகத்தில் புரையோடிச் செல்லரித்து வந்த மூடப் பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் தகர்த்தெறியப் பாரதியார், பாரதிதாசன், கவிமணி போன்றோரது வரிசையில் பாவலர் நாச்சியப்பனும் சிறந்த கவிதைகளைப் படைத்துள்ளார். பாரதியார், பாரதிதாசன் கவிதைகளில் காணப்படும் விறுவிறுப்பும் வேகமும் இவரது கவிதைகளிலும் காணப்படுகின்றன. சாதிஈ சமயம் போன்றவற்றின் பெயரால் நடக்கும் கொடுமைகளையும், வஞ்சனை, சதி, ஏமாற்று, பேராசை, பேடிமை, பொறாமை போன்ற இழிபண்புகளை ஒழித்துக் கட்ட பாரதி, பாரதிதாசன் தனது கவிதைகளில் கூறியதைப் போன்றே இவரும் தனது கவிதைகளில் சமூகத்திற்குப் பல கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார்.,

சாதி, சமயத்தின் பெயரால் மக்கள் பிளவுற்று வாழ்வதைப் பாரதி சபிக்கின்றார். இந்நாட்டில் வேதியராகப் பிறந்தாலும் சரி, வேறு குலத்தினராகப் பிறந்தாலும் சரி அனைவரும் ஒரு குலத்தினரே. அவருள் எவ்வித வேற்றுமையும் இல்லை என்பதை அறிவுறுத்திய பாரதி,

**"ஒன்று பட்டாலுண்டு வாழ்வு – நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"**

என்று மக்களுக்குள் ஒற்றுமை வேண்டும் என்பதையும், அதைப் பேணாதிருப்பின் அனைவருக்கும் தாழ்வே என்பதையும் தெரிவிக்கின்றார். பாவலரும் இதே கருத்தினைப் 'பண்பின் பரிசு' என்ற கதைப்பாடலில் விளக்குகின்றார். ஓர் உயர்குலப் பெண் ஆற்றில் மூழ்குகிறாள். சேரி இளைஞன் ஒருவன் அவளைக் காப்பாற்றுகின்றான. சனாதானிகள் செய்ந்நன்றி மறந்து அவன் சாதிச் சிறுமையை எண்ணிப் பழிக்கின்றனர். கையை வெட்ட உத்தரவு பிறக்கின்றது. அப்பெண் சாதியின் ஆதிக்கத்தை எண்ணிப் புலம்புகின்றாள். தீண்டாமை பற்றிப் பேசும் மக்களைப் பார்த்து,

**"சீதநிலவு தெளிக்கும் ஒளிவெள்ளம்**
**மோதி வரும்தென்றல், முகிலின் துளிவெள்ளம்**
**யாருக்கும் சொந்தம் அறிவரோ? கங்கைநதி**
**நீருக்கும் கோடை நிழலுக்கும் வையத்தில்**
**ஈசனவர் சொந்தம் என்று வழங்கி வைத்தான்"(நா.பா.தொகுதி1–பக்.எண் - 48)**

என்று வினா தொடுக்கின்றார். மக்களுக்கு இவ்வுலகில் அனைத்தும் பொது, யாரும் எவருக்கும் மேலோர், கீழோர் கிடையாது என்ற கருத்தினைப் பதிவு செய்துள்ளார். மனிதர்கள் அன்பை வழங்க வேண்டும், நெஞ்சையடக்க வேண்டும் என்று அறிவுரை வழங்குகின்றார். மேலும் சாதி வேறுபாடு காணுதல் பண்டைத் தமிழர் வழக்கம் அன்று, அது வேதியர் தொடர்பால் நம் நாட்டில் விளைந்த ஒரு கேடு. இது நமக்கு ஒரு இழுக்கு. (நல்வழிப்பா – 10) என்றும் சுட்டுகின்றார். அவ்வாறு மக்களைப் பேதம் பார்க்கும் நூலை எல்லாம் அழித்து விடுதலே மேல் என்கின்றார்.

மேலும் மூட நம்பிக்கையால் நம் மக்கள் அழிந்து போவதையும் தன் பாடல் வரிகள் மூலம் விளக்குகின்றார்.

**"தேங்கா யுடைத்து திருவா சகம்படித்தும்**
**பாங்காய் மணியடித்துப் பார்த்துவிட்டோம் - போங்காலம்**
**வந்துற்ற போது வழிமறித்துக் காப்பதற்கிங்**
**கெந்தம் செல்லு மிலை" (நல்வழிப்பா – 14)**

என்று சித்தர்களைப் போன்று தேங்காய், பழம் போன்றவற்றைக் கொண்டு பூசை செய்வதாலும், திருவாசகம் போன்ற பக்தி இலக்கியங்களைப் படிப்பதாலும் நம் மரணம் தள்ளி விடாது. இறப்பு என்பது அனைவருக்கும் பொதுவானதே. நம்மைக் கொண்டு செல்ல வரும் நாம் செல்வன் என்றோ, வறியன் என்றோ, இளைஞன் என்றோ, முதியன் என்றோ நம்மைப் பிரிப்பது கிடையாது. செல்லும் காலம் வந்து விட்டால் அனைவரும் காலனின் கட்டளைக்குப் பணிந்தே ஆகவேண்டும். எனவே வாழ்கின்ற காலத்து பூசை புனஸ்காரங்களில் பொழுதைப் போக்காது, நம்மால் இயன்ற அளவு பிறருக்கு உதவி புரிந்து வாழ வேண்டும் என்று சுட்டுகின்றார். மேலும் தெய்வத்திற்கு பொங்கலிட்டுத் தெய்வத்தைப் போற்றி ஒருவருக்கு நல்லவளம் வருமென்று எண்ணினால் அதில் எள்ளளவும் உண்மை கிடையாது. தன்னுடைய சொந்த முயற்சியில்லாமல், தெய்வம் காப்பாற்றும் என்று எண்ணுபவர் மூடர் என்று தெளிவுறுத்துகின்றார். எனவே நாம் வாழ்வில் நன்முறையில் வாழ்ந்து முன்னேற வேண்டுமென்றால், தெய்வத்தை நம்பாது, தன்கையை நம்பி பிறருக்கு உதவி செய்து வாழ வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

**பெண் முன்னேற்றம்**

பெண் முன்னேற்றம் சமூகத்தின் இன்றியமையாத ஒருறுப்பு. அது தடுக்கப்படும் சில சூழல்களையும் பாவலர் உள்ளத்தால் தாங்க இயலவில்லை. அவர்கள் மீது பரிவும், அன்பும் கொண்ட அவரது நெஞ்சம் இந்நிலை கண்டு நெகிழ்ந்து உருகியுள்ளது. பெண் அன்பின் வடிவம், தியாகத்தின் சிகரம், கனிவின் ஊற்று, கடமையின் களஞ்சியம், இல்லத்தின் அரசி, இன்னருளின் வழிகாட்டி இப்பண்புகளால் தெய்வீகமாய் ஒளிர்பவள்.

மேலும் இன்றைய சமூகத்தில் பெண்கள் தனியே வெளியே போவதே மிகக் கொடுமையான பின் விளைவுகளை உண்டாக்கக் கூடியதாய் உள்ளது. இந்நிலையை அன்றே கவிஞர், 'வாழ வைத்தான்' எனும் கதைப்பாடலில் சுட்டியுள்ளார். தன் காமப்பசிக்குப் பெண்கள் பயன்பட்டால் போதும் என்று நினைக்கின்ற பொறுப்பற்ற மனிதனின் கதை இது. இது கற்பனையாகவே இருப்பினும் இன்றைய சூழலில் பெரும்பாலும் நிகழ்கின்ற நிகழ்வாகவே இது காணப்படுகின்றது.

**"பண்பில்லா மாக்கள் பயிலும் ஒருநாட்டில்**
**பெண்கள் துணையின்றிச் செல்லல் பிழையென்றே" (நா.பா.தொகுதி1-பக்.எண்)**

என்று இன்றுள்ள நிலையினைத் தன் கவிதை வரிகளில் சுட்டிக் காட்டுகின்றார். என்று இன்றுள்ள நிலையினைத் தன் கவிதை வரிகளில் சுட்டிக் காட்டுகின்றார். ' பெண்டிர்க்கு உயர்வளி' (நெறிசூடி – 82) என்றும், சமுதாயத்தில் பெண்களுக்கும் பேச்சு சுதந்திரம் இருக்க வேண்டும் (நல்வழிப்பா – 5) என்றும் அத்தகைய நாடே முன்னேற்றப் பாதையில் செல்லும் என்றும் குறிப்பிடுகின்றார். மேலும் நல்வழிப்பா(நல்வழிப்பா – 16) பாடலில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சரிநிகர் சமானமாய் அனைத்தும் இருத்தல் வேண்டும் என்று சுட்டுகின்றார். இவ்வாறு 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்' என்று பாரதி சுட்டியது போன்று, சமூகம் பெண்களுக்கும் சமத்துவம் கொடுத்தல் வேண்டும் என்று தனது பாடல் வரிகளில் சுட்டுகின்றார். பெண்கள் 'நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும் கொண்டோராய் திகழ வேண்டும் என்பதைத் தனது, 'பம்பாய் பஞ்சாங்கம்' என்ற கதைப்பாடலில் சுட்டுகின்றார்.

**வாழும் முறை**

மனிதன் மனிதனாக வாழ வேண்டிய முறை பற்றிய பல்வேறு கருத்துக்களைப் பாவலர் நாச்சியப்பன் தன் கவிதைகளில் பதிவு செய்துள்ளார். ஔவையார், பாரதியார், பாரதிதாசன் போன்றோர் தங்கள் சூடியில் மனிதன் வாழ வேண்டிய முறை பற்றிக் குறிப்பிட்டுள்ளது

போன்று இவரும் தனது 'நெறிசூடி'யில் பல்வேறு நற்கருத்துக்களைக் குறிப்பிட்டுள்ளார். அதில் இடம்பெறுகின்ற 105 கருத்துக்களும் மக்களை வாழ்வில் மேன்மையடையச் செய்யும் கருத்துக்களே. அதில் இடம்பெறும் கருத்துக்களைப் பொதுவாக பின்வரும் வகையில் பாகுபடுத்தலாம்.

- வாழ்வில் அன்பை மேம்படுத்து
- இனிய முறையில் பேசு
- ஓயாது உழை
- தீமைக்குத் துணை போகாதே
- அறக்கருத்துக்களைப் பின்பற்று
- குறிக்கோளுடன் வாழ்
- தமிழுக்குப் பணி செய்
- சுயமரியாதையுடன் வாழ்
- உன்னை மேம்படுத்திக் கொள்
- எதற்கும் அஞ்சாதே

பெரும்பாலும் ஆத்திசூடியில் உள்ள கருத்துக்கள் அனைத்தும் இந்த பத்து பிரிவுகளின் கீழே அடங்கியுள்ளன. இப்பத்துக் கட்டளைகளை வாழ்வில் பின்பற்றினாலே நாம் வாழ்வில் மேன்மையடைந்து விடலாம் என்பதில் ஐயமில்லை.

தன்னம்பிக்கையே ஒரு மனிதனை மேம்படுத்துவது, வீழ்வது வெட்கமானது அன்று, ஆனால் தன்னம்பிக்கையின்றி வீழ்ந்து கிடப்பதே வெட்கரமானது. இக்கருத்தினை,

**"தன்னுறுதி யில்லானைத் தான்வெறுக்கு மிவ்வுலகம்**
**தன்னுறுதி யில்லா தவன்வாழ - இந்நாளில்**
**எச்சிறு செய்கையும் இல்லையே இல்லை கண்டீர்**
**பிச்சைத் தொழிலிற் பிற" (நல்வழிப்பா – 8)**

என்ற பாடலின் மூலம் சுட்டுகின்றார். பிறருக்கு உதவி செய்து வாழும் வாழ்வே உன்னதமானது. அத்தகைய வாழ்வினையே மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு பசித்தவர்களுக்குச் சோறிட்டு வாழ்வாரை வாழ்க (நல்வழிப்பா – 9) என்று வாழ்த்துகின்றார்.

அனைத்து உயிர்கள் மீதும் அன்பு செலுத்த வேண்டும் என்பது பாவலர் நாச்சியப்பனின் கருத்து. எனவே கருணையை வளர்த்துக் கொள் என்றும், புலால் உணவினை நீக்குக என்றும் வேண்டுகின்றார். (நல்வழிப்பா–45)

பொய் சொல்லாதீர்கள் (நல்வழிப்பா–18), காரணமின்றி உங்களை அடிமைப் படுத்துபவர்களிடம் அடிமையாகாதீர்கள் (நல்வழிப்பா–8), அனைவரிடமும் அன்பு செலுத்தி இன்சொல்லால் உலகை வசமாக்குங்கள் (நல்வழிப்பா–19) மூடநம்பிக்கைகளுக்கு ஆளாகாதீர்கள், (நல்வழிப்பா–22,25,26) போன்ற பல்வேறு கருத்துக்களையும், வாழும் முறைகளையும் நல்வழிப்பாவில் 44 பாடல்களின் வழி விளக்கியுள்ளார்.

அதுமட்டுமின்றி பாவலரின் உள்ளம் இயல்பாகவே தாய்மொழிப்பற்று உடையது. எனவே மனிதன் வாழும் முறை பற்றிக் குறிப்பிடுமிடத்து கூட, தாய்மொழியைப் பேணி வாழுங்கள் என்றே குறிப்பிடுகின்றார்.

**"தன்மொழியிற் பற்றில்லா தானை யுவகெல்லாம்**
**புன்மொழியால் தூற்றும் புவிமீதில் - அன்னோன்**
**பெரும்பார மாவான் பிறருந்தாம் நம்பற்**
**கருகதை யற்றவனாங் காண்"**

என்று தாய்மொழி மீது பற்றில்லாதவன், இவ்வுலகில் வாழ்வதற்கே அருகதையற்றவன் என்று குறிப்பிடுகின்றார். மேலும் தன்னம்பிக்கை இல்லாதவன், தாய்மொழியைப் போற்றாதவன், தன்மானம் போற்றாதவன் ஆகிய இம்மூவரும் இவ்வுலகிற்கே பெரும்பகை போன்றவர்கள் (நல்வழிப்பா–21) என்கின்றார்.

கல்விச் செல்வமே இவ்வுலகில் தலையாய செல்வம் போன்றது, அது ஒன்றே நமக்கு நிலையான புகழைத்தரக் கூடியது(நல்வழிப்பா–34). எனவே எப்பாடுபட்டினும் கல்வியறிவை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என்கின்றார். மேலும் நாம் பிறருக்கு அறிவுரை சொல்லும் முன் அவ்வறிவுரை கூற நாம் தகுதியானவர் தானா என்பதை முதலில் ஆராய்ந்து கொள்ள வேண்டும். அதனை விட்டு ஊருக்கு உபதேசம் வழங்கி விட்டு, அதனைத் தன் வாழ்வில் கடைபிடிக்காதவர்களை நாயிற் கடையனாய் (நல்வழிப்பா–35) குறிப்பிடுகின்றார். அதனைப் போன்றே நாம் ஒருவருக்கு அறிவுரை வழங்குகின்றோமெனின் அறிவுரை கேட்பவனின் தரம் அறிந்து கூற வேண்டும். இல்லையெனில் அது கல்லுக்குச் சொன்ன கதை என்றாகி விடும்.

இவ்வாறு பாவலர் நாச்சியப்பன் தன் கவிதைகளில் மனிதன் சமுதாயத்தில் வாழ வேண்டிய முறை குறித்தும், தனி மனித நிலையில் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டிய நிலை குறித்தும் குறிப்பிட்டுள்ளார்.

# புறநானூற்றில் வாழ்வியல் அறம்

***முனைவர் தே.மெர்லின் மினி,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, முஸ்லீம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு.

**முன்னுரை**

சங்ககாலத்தின் வரலாற்றுப் பெட்டகமாகவும், வாழ்வியல் களஞ்சியமாகவும் விளங்குவது புறநானூறு என்னும் இலக்கயமாகும். சங்ககாலத்தில் அகவாழ்க்கையைப் பிரதிபலிக்கின்ற அகஇலக்கியங்கள் மிகுந்திருப்பினும் புறவாழ்வியலை, அறநெறித் தத்துவங்களை, பண்பாட்டு அடையாளங்களோடு கூடிய உயர் பண்பு நெறிகளை அடுத்த தலைமுறையினருக்குக் கடத்துவதில் புறநானூறு இன்றளவும் தன்னை முழுமைப்படுத்தியுள்ளது. சமூக அறத்தைப் போற்றிப் பாதுகாக்கும் புறநானூற்றில் பொதிந்துள்ள தனிமனித ஒழுக்க நெறிகளை அறிவுறுத்துவதே இக்கட்டுரை நோக்கமாகும்.

**அறம்**

"அறம் என்ற சொல்லை அறு+அம் எனப் பிரித்துத் தீமையை அறுப்பது, நீக்குவது என்றும், அறு-அறுதி செய்வது, கடமைகளை வரையறுப்பது என்றும் பொருள் காண்பர்."[1] இவ்வாறு சான்றோர் விலக்கியன ஒழித்தலும் விதித்தன செய்தலும் அறம் எனக்கொள்ளுதல் பொருத்தமாகும். இதனையே "நல்லது செய்தல் ஆற்றீராயினும் அல்லது செய்தல் ஓம்புமின்"[2] எனக் கூறும் புறநானூற்று அடிகளும் இக்கருத்தினையே புலப்படுத்தும். உலகப் பொதுமறை தந்தருளிய திருவள்ளுவரும் கூட,

**"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்ற தறம்"**[3]

என்று ஒரு மனிதன் தன் வாழ்வில் தள்ளத்தக்க செயல்களை களைந்து வாழ்வதே அறம் என்கிறார்.

**தனிமனித அறம்**

தனிமனிதனின் ஒழுக்க உணர்வே சமுதாயத்தை மேன்மையுறச் செய்யும். இதனை கருதியே பல்வேறு அறங்கள் தனி மனிதர்களுக்கு வலியுறுத்தப் பெறுகின்றன. அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் அறமே வலிமையுடையது என்பதை,

**"சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்**
**அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல"**[4]

என்கிறது புறநானூறு.

**ஒழுக்கம்**

'ஓதலிற் சிறந்தது ஒழுக்கமுடைமை' என்கிறது கலித்தொகை. ஒழுக்கம் தான் ஒருவனை உயர்ந்தவனாகவும், சான்றோனாகவும் மாற்றும். அது உயிரை விட மேலானது.

**ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்"**[5]

ஒருவன் ஒழுக்கம் தவறினால் உலகம் அழியும் வரையும் அப்பழியிலிருந்து மீள முடியாது. இந்த ஒழுக்கம் தனிமனித வாழ்வில் கடைப்பிடிக்கும் பொழுது வாழ்வு இன்னும் மேம்பாடு அடையும். ஓர் ஆடவனின் உழைப்பும், முயற்சியும் சமூகத்தில் முக்கிய இடம் பெறுகின்றது. குடும்பமும், சமூகமும் ஆடவனின் உயரிய சிந்தனையால் வழி நடத்தப்படுகின்றது. இதனால் சமூகத்தில் ஆடவனின் ஒழுக்கம் போற்றப்பட்டது. ஆடவர்கள் நல்லவர்களாகவும் ஒழுக்க வாழ்வைக் கடைப்பிடிப்பவர்களாகவும் உள்ள நாடே வளம் செழிக்கும் நாடாக அமையும் என்பதனை புறநானூற்றில் ஔவையார்

**"நாடா கொன்றோ! காடா கொன்றோ!**
**அவலா கொன்றோ! மிசையா கொன்றோ!**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை; வாழிய நிலனே!"**[6]

என்று குறிப்பிடுகிறார்.

**வாய்மை**

**"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்று**
**தீமை இலாத சொலல்"**[7]

பிறர்க்கு தீமை பயக்காத சொல்லே வாய்மை என்கிறது திருக்குறள். சங்ககாலப் புலவர்களில் பலர் பொய்யாமையை மேற்கொண்டு வாழ்ந்தனர். வறுமையிலும் பொய்யாமையைக்

கடைப்பிடித்தனர். அவர்களுள் ஒருவர் மருதன் இளநாகனார். இவர் நாஞ்சில் வள்ளுவனிடம் பரிசில் வேண்டிச் சென்ற போது அவனை வாழ்த்தி போர் ஏற்படுமாயின் தன் சுற்றம் பசியால் அழிந்துவிடும். ஆதலால் விரைந்து பொருள் செய்க என வேண்டினார். அப்போது அவர் பொய்யாமை அறத்தை நினைந்து

**"வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்**
**மெய் கூறுவர்"**[8]

என மொழிந்தார். இவ்வரிகள் வறுமையுற்ற காலத்தும் புலவர் கூறுவதற்கு அஞ்சும் உயர்ந்த பண்பை எடுத்துரைக்கிறது.

வன்பரணர் என்ற புலவர் பொய்யாகப் புனைந்து கூறிப் புகழ்ந்து பொருள் பெறுதல் தம் இயல்பு அன்று என்பதை

**"பீடு இல் மன்னர்ப் புகழ்ச்சி வேண்டிச்**
**செய்யா கூறிக் கிளத்தல்**
**எய்யா தாகின்று எம்சிறு செந்நாவே"**[9]

என்று பெருமிதமும் பணிவும் தோன்றக் கூறினார்.

**செய்ந்நன்றி மறவாமை**

**"செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்**
**வானகமும் ஆற்றல் அரிது"**

என்று செய்ந்நன்றியைச் சிறப்பிப்பார் வள்ளுவர். செய்ந்நன்றி மறத்தல் மிகக் கொடிய பாவம் என்று ஆலந்தூர் கிழார் என்ற புலவர் குறிப்பிடுகின்றார்.

**"ஒருவன் செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென**
**அறம் பாடிற்றே ஆயிழை கணவ"**

என்பது புலவர் வாக்கு. புலவர் தம் பாட்டின் முன் அடிகளில் பசுவின் மடியை அறுத்து அதனால் பெறும் பயனைக் கெடுத்தோர், கல்வி புகட்டிய ஆசிரியரைப் பழித்துக் கொடுமை செய்தோர் ஆகியோரை மிகப் பெரிய குறிறவாளிகளாகக் குறிப்பிடுகிறார். இப்பெரும் பாவத்திலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள எவ்வகையான வழிமுறையும் இல்லை என்பது சமூக நியதி. இந்தத் தனிமனித நியதியை தான் புறநானூற்றில்

**"ஆன்முலை அறுத்த அறனிலோர்க்கும்**
**மாண் இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**குரவர்த் தப்பிய கொடுமையோர்க்கும்**
**வழுவாய் மருங்கின் கழுவாயும் உள"**

என்று ஆலந்தூர்கிழார் தெளிவுப்படுத்துகிறார்.

**ஈகை**

ஈகை என்பது பொருள் உள்ளவன் பொருள் இல்லாதவனுக்கு கொடுக்கும் செயல் ஆகும். வறியவருக்கு ஒன்று ஈவதே ஈகை என்கிறது வள்ளுவம். சங்ககாலத்தில் ஈதல் பற்றிய எண்ணம் பரவலாக இருந்த போதும் இரத்தல் பற்றிய சிந்தனையும் இருந்துள்ளது. என்பதை

**"ஈயென இரத்தல் இழிந்தன்று; அதன் எதிர்**
**ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று**
**கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று; அதன்எதிர்**
**கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"**[10]

என்று கொடுக்கும் தன்மையில் முறையறிந்து கொடுத்தல் அவசியம் என்பதை புறநானூறு குறிப்பிடுகின்றது. இதனால் தான் ஔவையார் காலம் தாழ்த்தி தனக்கு பொருள் கொடுத்த மன்னனைப் பார்த்து 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' என்று காலம் தாழ்த்திக் கொடுத்தப் பொருளை பெறாமல் 'கொள்ளேன்' என்று மறுத்துரைக்கிறார்.

**முடிவுரை**

சமூக முன்னேற்றத்திற்குத் தனிமனித ஒழுக்கமே தலை சிறந்ததாகப் போற்றப்படுகின்றது. தனிமனித உணர்வில் இயல்பாகக் குடி கொண்டிருக்கும் பண்பு நெறிகளை ஊக்குவிக்கும் போது அவை மேலும் வலுப்பெறுகின்றன. சமூகத் தேவைக்காக ஒழுங்கமைவிற்காக மனிதனுக்கு அச்சமூகமே அறநெறிகளை அதிகமாக போதித்துள்ளது என்பதை புறநானூறு என்ற வாழ்வியல் பெட்டகம் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. சாரங்கபாணி, இரா.சங்கத்தமிழ் வளம், ப.39
2. புறம், 195: 6 -7
3. திருக்குறள், 36
4. புறம், 31: 1-2
5. திருக்குறள், 131
6. புறம், 187
7. திருக்குறள், 291
8. புறம், 139 : 5-6
9. புறம், 148 : 5-7
10. புறம், 204: 1-4

# இலக்கியம் காட்டும் பொருள் அறம்

***முனைவர் ம.வனத்தையன்,** இணைப்பேராசிரியர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர், தூய வளனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), கடலூர்-1.

**முன்னுரை**

**"அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"**

என்ற வள்ளுவரின் கருத்துக்கேற்ப பொருள் இருந்தால் தான் ஒரு மனிதனின் சமுதாய வாழ்வு உயரும். அவனும் பிறரால் மதிக்கத்தக்கவனாக விளங்குவான். அதனால் இவ்வுலகில் வாழும் ஒவ்வொருவருக்கும் பொருள் என்பது அவசியம் தேவைப்படுகிறது. ஒருவன் பொருளை ஈட்டச் செல்லும் பொழுது அவனுக்குரிய நல்லொழுக்கத்தில் இருந்து வழுவிச் செல்வதையே வாழ்க்கை நெறியாகக் கொள்பவர்களுக்கு நெறிப்படுத்தும் கருத்துக்களை எடுத்துக்கூறுவது பொருள் அறம் ஆகும். இலக்கியத்தில் காணப்படும் பொருளறக் கருத்துக்களில் பொருள் ஈட்டுவதற்கான காரணமும், பொருளின் இயல்பும் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பொருள் ஈட்டுவதன் காரணம்**

சங்க காலத்தில் களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவன் தலைவிக்கு மணம் நிகழும் காலத்தில் பொருள் தேடிக் கொண்டு வந்த பின் மணம் செய்து கொள்ளுகிறேன் என்று தலைவிக்கு உறுதிமொழி அளித்துவிட்டுப் பிரிந்து செல்வான். இதனை "வரைவிடை வைத்துப்பொருள் வயிற் பிரிதல்" என்பர்.

திருமணம் செய்து கொண்டு இல்லறம் நடத்தும் காலத்தில் பொருள் தேவைப்படுவதால் தலைவன் பொருள் தேடப் புறப்படுவான். இந்த இரண்டு நிலைகளும் பொருள் ஈட்டுவதற்கான காரணங்களாக அமைகின்றன.

**பொருளின் இயல்பு**

ஒருவர் மதிக்கப்படாதவராக இருந்தாலும் அவரை மதிப்பு உடையவராகச் செய்வது பொருளே ஆகும். இதுவே பொருளின் இயல்பு ஆகும். அவ்வாறு மதிப்பு உடையவனுக்கு அப்பொருள் அன்றி வேறு பொருள் எதுவும் இல்லை என்கிறார் வள்ளுவர். இதனை,

**"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்லது இல்லை பொருள்"**

என்ற குறள் வழி அறியலாம்.

ஒருவன் பிறரால் மதிக்கப்படும் அளவிற்கு வாழ வேண்டுமானால் பிறர்க்குக் கொடுப்பதற்கும், இல்லறமாகிய வாழ்க்கை நடத்துவதற்கும் பொருள் வேண்டும். அப்பொருளை நேர்மையான வழியில் ஈட்ட வேண்டும். அறம் அல்லாத வழியில் ஈட்டும் பொருள் எந்தப் பயனையும் தராது. அப்பொருள் அவனை விட்டு நீங்கி விடும். இதுவே பொருளின் இயல்பாகும்.

தன்னுடைய ஒழுக்க நிலையில் இருந்து வழுவி, பொருள் ஈட்டச் செல்பவனை நெறிப்படுத்தும் வகையில் பல்வேறு அறக்கருத்துக்களை இலக்கியங்களில் காணமுடிகிறது. பொருள் என்பது வாழ்க்கைக்குத் தேவையான ஒன்று. இருப்பினும் அப்பொருளை அறவழியிலேயே ஈட்ட வேண்டும் என்பதை இலக்கியங்களின் வழி அறியலாம்.

பொருளீட்டும் கடமை

ஒருவன் களவொழுக்கத்தில் ஈடுபட்டிருந்தாலும், கற்பொழுக்கத்தில் ஈடுபட்டிருந்தாலும் அவனிடம் பொருள் இல்லையென்றால் யாரும் அவனை மதிக்க மாட்டார்கள். ஆகவே நம் சான்றோர்கள் பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்று கூறியுள்ளனர். மனிதர்கள் அனைவரும் அவர் அவர் வாழ்க்கையை நடத்துவதற்கு பொருள் ஈட்டுவதையே குறிக்கோளாகக் கொள்ள வேண்டும்.

ஆண்கள் தாமே முயன்று பொருளீட்டி தாமும் உண்டு, பிறர்க்கும் உதவ வேண்டும். தொழில் செய்வதே ஆண்மகனின் தலையாய கடமை ஆகும். இதனை,

**"வினையே ஆடவர்க்கு உயிரே"**

என்ற குறுந்தொகை அடி உணர்த்துகிறது. தான் வாழ்வதற்குரிய பொருளை ஈட்டுவதையே கடமையாகக் கொள்ள வேண்டும் என்பதை இதன்வழி அறியமுடிகிறது.

ஆண்கள் எந்த வேலையும் செய்யாமல் முன்னோர் முயன்று திரட்டிய பொருளைச்செலவழிப்பது இழிவான செயலாகும். குந்தித் தின்றால் குன்றும் மாளும் என்பது பழமொழி. வறியவராக வாழ்தல் இரத்தலினும் கொடிது. ஆகவே பொருளீட்டலைத் தலையாய கடமையாகக் கொள்ள வேண்டும் என்பதே ஆடவர் குறிக்கோளாகும். இதனை,

**"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்**
**இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவு"**

என்ற குறுந்தொகை அடிகள் உணர்த்தும்.

இம்மையில் இன்பமாக வாழ ஏற்ற வழி செல்வமே ஆகும். நல்லறங்களைச் செய்வதற்கும் செல்வமே சிறந்த கருவியாக அமையும். அதனால் பொருள் ஈட்டும் முயற்சியில் ஒவ்வொரு ஆடவரும் ஈடுபட வேண்டும்.

ஒருவன், சிறந்த அறத்தை நிலைநாட்டவும், தனது எதிரிகளை அழிக்கவும், அருளுடையோர்க்கு அளிக்கவும், அன்பு நிறைந்த காதலுடன் இல்லற வாழ்க்கையை இன்பமாக வாழவும் செய்வது பொருளே ஆகும். இதனை,

**"அரிதாய அறன்எய்தி அருளியோர்க்கு அளித்தலும்**
**பெரியதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்**
**புரிவுஅமர் காதலின் புணர்ச்சியும் தரும்".**

என்ற கலித்தொகைப் பாடல் அடிகளால் அறியமுடிகிறது. ஒவ்வொரு ஆடவனும் பொருள் ஈட்டுவதையே கடமையாகக் கொள்ள வேண்டும் என்பது இதன் வழி வெளிப்படுகிறது. இதையே வள்ளுவரும்,

**"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து**
**தீதின்றி வந்த பொருள்"**

என்று கூறியுள்ளார். பொருள் சேர்க்கும் வகை அறிந்து தீமை இல்லாது வந்த பொருள் அறத்தையும் கொடுக்கும் இன்பத்தையும் கொடுக்கும்.

பொருள் ஈட்டல் என்பது அறம் செய்து வாழ்வதற்கே பொருளை ஈட்டித் தான் மட்டும் வாழாமல் பிறருக்குக் கொடுத்து வாழ வேண்டும். இதனை,

**"புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி**
**இன்னினியே செய்க அறிவினை"**

என்ற நாலடியார் பாடல் வழி அறியலாம். புல் நுனிமேல் உள்ள நீரைச்சுட்டி விரைந்து அறம் செய்ய வேண்டுவதன் அவசியத்தை நாலடியார் வலியுறுத்துகிறது.

**பொருளின் தேவை**

ஒருவன் எந்த காரியததைச் செய்ய வேண்டுமானாலும் அவனுக்குப் பொருள் தேவைப்படுகின்றது. பொருள் இல்லையென்றால் ஒன்றும் செய்ய இயலாது. பொருளீட்டச் செல்பவனுக்கு பொருளை விட பெரிய இன்பம் தருவது எதுவாக இருந்தாலும் அவ்வின்பத்திற்குக் காரணமாக இருப்பது பொருளே ஆகும். அதனால் பொருளையே சிறந்ததாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

இல்லற வாழ்க்கையை நடத்திவந்த தலைவன் பொருள் ஈட்டுவதன் காரணமாகத் தலைவியை விட்டுப் பிரிந்தான். அவன் பிரிவை ஆற்றாத தலைவி பொருள் குறித்து மகளிரைப் பிரிந்து செல்லுதல் ஆடவர்க்கு இயல்பு என்று கூறப்படுமாயின் அறத்தைக்காட்டிலும் பொருள்தான் சிறந்தது போலும் என்று குறிப்பிடுகின்றாள். இதனை,

**"அரிதுமண் அம்ம அறத்தினும் பொருளே"**

என்ற நற்றிணைப்பாடல் அடி உணர்த்தும். பொருளை விடப் பெரிய இன்பம் தருவது எதுவாக இருந்தாலும் பொருள்தான் சிறந்தது என்று ஆடவர் வாழ்ந்த அறக்கருத்தை அறியமுடிகிறது.

**பொருளீட்டும் முறை**

பொருள் ஈட்டச் செல்லும் ஒருவன் நேர்மையான வழியில் பொருள் ஈட்ட வேண்டும். ஒழுக்கம் தவறிய நெறியில் பொருள் ஈட்டினால் அப்பொருள் அவனிடம் நிலைத்து நிற்காது, அவனுக்கு அழிவைத் தரும். அதனால் பொருள் ஈட்டும் நெறியில் இருந்து தவறாது முறையோடு பொருள் ஈட்ட வேண்டும்.

ஒழுக்கம் தவறிய நெறியில் ஈட்டும் பொருளானது இம்மையிலும் மறுமையிலும் பகையாகி நின்று துன்பத்தை விளைவிக்கும். இதனை,

**“செம்மையின் இகந்து ஒரீஇப் பொருள் செய்வார்க்கு**
**இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ”**

என்ற கலித்தொகை அடிகள் உணர்த்தும். நேர்மையான வழியில் பொருளை ஈட்டிச் சேர்க்க வேண்டும். பொருளாசைக் கொண்டு அறமல்லாத வழிகளில் பொருளைச் சேர்ப்பது தவறு என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

முறையாகப் பொருள் தேடாமல், ஒருவன் தன்னுடைய நடுநிலைமையில் இருந்து தவறுவதால் வரும் செல்வத்தை, அது நன்மை தருவதாக இருந்தாலும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று வள்ளுவரும் கூறியுள்ளார். இதனை,

**“நன்றே தரினும் நடுவுஇகந்துஆம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல்”.**

என்ற குறள் வழி அறியலாம்.

ஒருவன் தன்னுடைய நிலையில் இருந்து தவறி பிறர் வருந்துமாறு பெற்ற பொருள், அதைப் பெற்றவன் அழும்படியாகச்செய்து அவனை விட்டு அகன்று விடும் எனக்கூறும் வள்ளுவர் அருளோடும் அன்போடும் வராத செல்வத்தை தீமையானது என்று தொடாமல் நீக்கி விட வேண்டும் என்றும் கூறியுள்ளார். இதனை,

**“அருளோடும் அன்போடும் வாராப்பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்”**

என்ற குறள் உணர்த்தும். நேர்மையான வழியில் பொருள் ஈட்ட வேண்டும். அறம் அல்லாத வழியில் வரும் பொருளை தீமையென்று கருதி ஒதுக்கி விட வேண்டும் என்ற கருத்தை இதனால் அறியமுடிகிறது.

நல்லவராக இருந்தாலும் கெட்டவராக இருந்தாலும் தனக்கு உரியவர் இன்னார் தான் என்று கருதி பொருளானது ஒருவரிடத்தில் நிலைத்து நிற்காது. நல்ல செயல்களைச் செய்பவரிடமெல்லாம் மாறி மாறிச் சென்று தங்கும். இதனை

**“கிழவோர் இன்னார் என்னாது பொருள்தான்**
**பழவினை மருங்கில் பெயர்பு பெயர்பு உறையும்”.**

என்ற கலித்தொகைப் பாடல் அடிகள் உணர்த்துகின்றன. நல்லொழுக்கத்திலிருந்து தவறி பொருள் ஈட்டுதல் கூடாது. முறையான நெறியில் தான் பொருள் ஈட்ட வேண்டும் என்பதை இப்பாடலால் அறியமுடிகிறது.

குற்றமற்ற செல்வம் உண்டானால் அது தொடங்கி ஏர் நடந்ததனால் உண்டான உணவை விருந்தினர் முதலிய பலரோடுங் கூடி உண்ண வேண்டும். ஏனென்றால் (செல்வம்) பொருள் உறுதி பொருந்த யாரிடத்திலும் நிலைத்திராமல் வண்டி உருளைபோல மாறிப்புரளும். இதனை,

**“துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்**
**பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க**
**அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்**
**சகடக்கால் போல வரும்”**

என்ற நாலடியார் பாடலாலும் அறியமுடிகிறது.

ஒருவனுக்கு பாவங்களைச் செய்யாமல் அறத்தைப் பின்பற்றி நடக்கும் வாழ்க்கையும், ஒருபோதும் பிறருடைய வீட்டின் படியில் போய் நின்று இரக்காத செல்வமும் ஆகிய இரண்டும் முறையாகத் தேடிய பொருளால் தான் உண்டாகும். இதனை,

**“அறன்கடைப் படாஅ வாழ்க்கையும் என்றும்**
**பிறன்கடைச் செலாஅச் செல்வமும் இரண்டும்**
**பொருளின் ஆகும்”**

என்ற அகநானூற்றுப் பாடல் அடிகளால் அறியலாம். முறையான ஒழுங்கான நெறியில் சென்று பொருள் ஈட்டுவதை சிறந்த அறம் என்று இப்பாடல் வலியுறுத்துவதைக் காணமுடிகிறது.

**முடிவுரை**

அனைவரும் தம் வாழ்க்கையை நடத்துவதற்குப் பொருள் இன்றியமையாததாக உள்ளதால் அதனை ஈட்டுவதையே கடமையாகக் கொள்ள வேண்டும். பொருளை ஈட்டும் போது முறையாகப் பொருளை ஈட்ட வேண்டும். அவ்வாறு ஈட்டிய பொருளே ஒருவருக்கு இன்பத்தைத் தரும். அறம் அல்லாத வழியில் ஈட்டிய பொருள் துன்பத்தையே கொடுக்கும். ஆகவே அற வழியில் பொருளை ஈட்டி இன்பமாக வாழ்வதே சிறப்பாகும்.